ஆசிரியர் சங்கமம் 2022 (L. P பிரிவு).

ஆசிரியர் சங்கமம் 2022 (L. P பிரிவு).

பயிற்சி முன்னுரை

மார்ச் 2020 இல் கோவிட் தொற்றுநோய் வெடித்த பிறகு,பள்ளிகள் அனைத்தும் அடைக்கப் பட்ட சூழலில் மாணவர்கள் அனைவரும் வீடுகளில் தனிமைப் படுத்தப் பட்டனர். அரசும் ஆசிரியர்களும் சமூகமும் இணைந்து பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுத்தன. இணைய வழி வகுப்புகள், வாட்ஸ் ஆப் குழுக்கள்

மற்றும் கூகில் செயலி வழியான கற்றல், மேலும் நேரடியாக மாணவர்களின் வீட்டுகளுக்குச் சென்று உதவுதல் எனப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தப்பட்டன. எனினும் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்ட மாணவர்கள் உடலளவிலும் உள்ள அளவிலும் பல்வேறு திறன் வளர்ச்சியிலும் அறிவு உருவாக்கத்திலும் பின்னடைந்த நிலையிலேயே காணப்படுகின்றனர் என்பதை SCERT போன்ற கல்வி நிறுவனங்கள் நடத்திய ஆய்வுகள் சுட்டிக் காட்டின. கொரோனாவின் தாக்கம் குறைந்ததன் காரணமாக. நவம்பர் 2021 முதல் குழந்தைகள் பள்ளிக்குத் மீளத் தொடங்கினர். கோவிட் 19 ல் இருந்து ஒட்டு மொத்த சமூகமும் மீண்டெழ இன்னும் நேரம் பிடிக்கக் கூடும்.. நாம் அனைவரும் மனித சமூகத்திற்கு அறிமுகமில்லாத ஒரு புதிய சூழலில் வாழப் பழகி இருக்கிறோம். கோவிட் காலச் சூழலில் பெரியோர்களை விட குழந்தைகள் அதிகம் பாதிக்கப் பட்டனர்.. அணி சேர்வது, விளையாடுவது, நண்பர்களுடன் விஷயங்களைப் பகிர்ந்து கொள்வது போன்றவை குழந்தையின் இயல்பு. தற்காப்புக்காக வீட்டிலேயே இருக்க வேண்டிய நிலை இயற்கையாகவே குழந்தைகளின் வளர்ச்சியில் பல இடைவெளிகளை உருவாக்கியுள்ளது. அது உணர்ச்சிகரமானதாக இருக்கலாம், சமூக உணர்வு தொடர்பானதாக இருக்கலாம், அறிவுசார்ந்ததாக இருக்கலாம், உடல் வளர்ச்சியுடன் தொடர்புடையதாக இருக்கலாம். தன்னைச் சுற்றியுள்ள இயற்கையோடு இயைந்து செயல்பட முடியாததாக .இருக்கலாம் இவை அனைத்தும் குழந்தைகளை பல்வேறு நிலைகளில் பாதித்திருக்கக் கூடும். கோவிட் காலத்திற்கு முன்பிருந்த மாணவர்களின் தரத்தையும் கோவிட்டிற்குப் பிறகு பள்ளி களுக்கு வந்த மாணவர் களின் தரத்திற்கும் இடையே மிகப் பெரிய வேறுபாட்டை வெளிப்படையாகக் காண இயலும். கல்விக் கூடங்கள் வெறும் கற்றல் கற்பித்தல் செயல்களை மட்டும் நடத்தும் ஒரு சாதாரண நிறுவன மல்ல மாறாக ஒரு மாணவின் முழுமையான வளர்ச்சியை முன்னிறுத்திச் செயல்படும் ஒரு நிறுவனம் ஆகும். அந்த வகையிலே கோவிட் காலக் கட்டத்தில் மாணவர்கள் எதிர்கொண்ட கற்றல் இடைவெளிகளைக் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்யும் விதமாக இப் பயிற்சி வகுப்பு அமையும் என நம்புவோமாக.

அணுகுமுறை

ஆசிரியர் சங்கமம் அடுத்த ஒரு வருடத்திற்கான விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

ஆசிரியர் சங்கமம் துல்லியமான இலக்குகள் மற்றும் செயல்முறைகளை உள்ளடக்கியதாக அமையும், இது ஒரு மாணவன் ஆண்டு முழுவதும் தன்னம்பிக்கையுடன் என்ன அறிவு மற்றும் திறன்களைப் பெற வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதில் ஆசிரியர்களுக்கு உதவுவதாக இருக்கும்..

ஆசிரியர் சங்கமம் LP பிரிவில் கருப்பொருள் அல்லது வகுப்பு அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படவில்லை. அனைத்து வகுப்புகளிலும் மற்றும் அனைத்து பாடங்களிலும் உள்ள ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைகளை அறிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறது. இது பள்ளியின் ஒட்டு மொத்த செயல் வரிசையாக மாற வேண்டும். ஒரு பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் இணைந்து , வரும் ஓராண்டிற்கான திட்டமிடல்களை ஒன்றாகச் செய்வதே இதன் நோக்காகும். .

நான்காம் வகுப்பின் முடிவில், அனைத்து ஆசிரியர்களும் ஒரு மாணவன் எட்ட வேண்டிய திறன்களின் எல்லையைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தத் தர நிலையை அடைய ஒவ்வொரு வகுப்பிலும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவு பெற வேண்டும். பல ஆண்டுகளாக இது அவரவரது வகுப்பை மட்டுமே மையமாகக் கொண்ட ஒரு பயிற்சித் திட்டமாக இருந்தது. அதன் வரம்புகளை நாம் கடக்க வேண்டும்.

தனது வகுப்பில் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய விஷயங்களை ஆசிரியரே வடிவமைக்கும் வகையில் செயல்முறையை உருவாக்க வேண்டும். ஒருதலைப்பட்சமாக வளங்களை மேலிருந்து வழங்குவதற்குப் பதிலாக மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத்

தீர்வு காண்பதற்கு பல்வேறு செயல்பாடுகளை உருவாக்குவதற்கான செயல் வரிசைகள் அந்தந்த அடிப்படை தளத்தில் (பள்ளி அளவில்) வடிவமைக்கப்பட வேண்டும்.

அறிவை உருவாக்கத் துணை புரிபவர்கள் என்ற அடிப்படைக் கருத்தை ஆசிரியர்கள் நிலைநாட்ட வேண்டும். அறிவை உருவாக்கும் செயல்முறையைப் பின்பற்றுவதே மிகவும் பொருத்தமான பட்டறை முறை. ஆசிரியர்களின் ஆய்வுத் திறன்களை ஊக்குவித்து அறிவு உருவாக்க செயல் வரிசையின் வழிமுறையை அடைய அவர்களுக்கு உதவும் ஒரு செயல்முறை பின்பற்றப்பட வேண்டும்.

பட்டறைகளின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பது உட்பட ஆசிரியர்களின் தேவைகளை மதிக்கும் நெகிழ்வான அணுகுமுறையை பின்பற்றவும். இதற்கு ஓபன் என்டட் என்ற வேறு முறையைப் நடைமுறைப்படுத்திப் பார்க்க முனைகிறது.

பொது நோக்கங்கள்.

1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளை (உணர்ச்சி, மற்றும் சமூகத் தொடர்பு அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி , நுண்தசை வளர்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன்) நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

2. அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கல்வி முறையை வலுப்படுத்தும் ஆராய்ச்சியாளர்களாகவும் கண்டடைவாளர்களாகவும் ஆசிரியர் களைத் திறன் பெறச் செய்து வட்டார அளவிலான ஆசிரியர்களின் கற்றல் குழுக்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

3. நவீன தொழில்நுட்பத்தின் உகந்த பயன்பாட்டின் மூலம் கற்பித்தல் மற்றும் கற்றலை உயர் நிலைக்கு கொண்டு வரும் திறன்மிக்க ஆசிரியர்களையும் பள்ளிகளையும் உருவாக்குதல்.

4. தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணையத்தின் பயன் பாட்டை உறுதி செய்து பள்ளியின் கற்றல் கற்பித்தல் உத்திகளை மேம்படுத்துவதற்கான அடித்தளத்தை தயார் செய்தல்.

5. ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் எட்ட வேண்டிய கல்வி இலக்குகளை மனதில் கொண்டு முழுமையான பள்ளி அளவிலான கல்வித் திட்டத்தை வடிவமைத்தல் (அகாடமிக் மாஸ்டர் பிளான்) அவரவர் பள்ளிக்கு ஏற்றாற் போல பள்ளி அகாடமிக் மாஸ்ட்டர் பிளானை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்புகளை வழங்குதல்.

6. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

7. கலந்து கற்றல் முறைகளின் வாய்ப்புகள் மற்றும் செயல் வரிசை போன்றவை பற்றித் தெளிவு பெறுதல்.

செயல் வரிசை

அமர்வு : 1 ஆயத்தச் செயல்பாடு

RP

- இரண்டு வருடங்கள் கழித்து இப்படி ஒன்றாக இணைந்து பயிற்சியில் பங்கெடுப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பு கிறேன். மகிழ்ச்சி வரும்போது அதை வெளிப்படுத்த வேண்டும் அல்லவா

- கைதட்டுவது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள எளிதான வழி.
- நாம் ஒன்றாக கைதட்டுவோம்.
- R P கை தட்ட பங்காளிகள் அனைவரும் இணைந்து கை தட்ட வாய்ப்பளித்தல்.
- கை தட்டு உங்களுக்குப் பிடித்ததா?
- இனி நாம் வேறொரு தாளத்தில் கைதட்ட முயற்சிக்க.லாமா ?
- மீண்டும் தாளத்தை மாற்றி கை தட்ட வாய்ப் பளித்தல்.
- (வேறுபட்ட விதத்தில் கைதட்டிய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் வாழ்த்துக்கள்)
- பங்கேற்பாளர்களின் இருக்கையின் நடுவில் RP அமைதியாக நடந்து செல்கிறார்.
- நான் நடந்த இடம் ஒரு கற்பனைக் கோடு. கோட்டின் இடது பக்கத்தில் இருப்பவர்கள் தங்கள் நாற்காலிகளை இடதுபுறமாகவும், வலதுபுறத்தில் உள்ளவர்கள் தங்கள் நாற்காலிகளை வலதுபுறமாகவும் நகர்த்த வேண்டும்..
- இரண்டு பகுதிகளுக்கும் இடையே குறைந்தது இரண்டு மீட்டர் இடைவெளியாவது இருக்க வேண்டும்.
- இப்போது நாம் இரண்டு குழுக்களாக மாறிவிட்டோம் அல்லவா?

- . RP மீண்டும் இந்த இரண்டு குழுக்களின் நடுவில் நடத்தல்... இந்த கற்பனைக் கோட்டின் இருபுறமும் கோட்டிலிருந்து இரண்டு மீட்டர் பின்னோக்கி அமரச் செய்தல்

- .நாம் இப்போது எத்தனை குழுக்களாக மாறிவிட்டோம்? நான்கு குழுக்களாக மாறி விட்டோம்)
- (ஒவ்வொரு குழுவிலும் உள்ள அங்கங்களின் எண்ணிக்கையில் சிறிய வேறுபாடு இருக்கலாம். எண்ணிக்கையைச் துல்லியமாக்க சமுயற்சி செய்ய வேண்டியதில்லை.)

- நான்கு குழுக்களாக மாறினோம் அல்லவா ! இனி ஒரு சிறிய போட்டியில் நாம் பங்கெடுக்கலாம். ஒவ்வொரு அணியும் கைதட்ட ஒரு தாளத்தைக் தேர்ந்தெடுக்கவும் ..
- ஐந்து நிமிடங்கள் ஆயத்த நேரம். விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- RP எந்தக் குழுவை நோக்கி கையைக் காட்டுகிறாரோ அந்தக் குழு கைதட்ட வேண்டும்.
- RP, கையை மறு குழுவை நோக்கி மாற்றும் வரை அந்தக் குழு கை தட்டிக் கொண்டிருக்க வேண்டும்.
- RP அவர்களிடமிருந்து கையை மற்று குழுவை நோக்கித் திருப்பும் போது மற்ற குழு வேறுபட்ட முறையில் கை தட்டவேண்டும்.
- RP கையை தொடர்ந்து ஒவ்வொரு குழுவையும் நோக்கித் திருப்புதல். அவ்வாறு கை காட்டுவதற்கு ஏற்ப ஒவ்வொரு, குழுவும் கை தட்ட வேண்டும்..
- அனைத்து குழுவின் பங்கேற்பிற்குப் பிறகு சிறப்பாகச் செயல்பட்ட குழுவை RP பாராட்டுதல்..
- இந்தச் செயல்பாட்டை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்ற வேறு என்னென்ன செய்யலாம்? செயல் வரிசையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
- சிந்திக்கவும், திட்டமிடவும், ஒத்திகை பார்க்கவும் போதுமான நேரம் வழங்குதல் . 5 நிமிடங்கள்.
- எதிர்பார்க்கப்படும் செயல்திறன், செய்கைப் பாடலுடன் நடிப்பு, பங்காளிகள் வெவ்வேறு விதமாக நின்று அல்லது உட்கார்ந்து நடிப்பது, ஒப்பனை / கோல் விளையாட்டு / திருவாதிரை, கும்மி போன்ற நிகழ்ச்சிகள்.
- ஒவ்வொரு குழுவும் வெளியிட வாய்ப்பளித்தல்
- RP யின் ஒருங்கிணைப்பு

- அனைவரும் குழுவாகவும் ஒற்றுமையாகும் இணைந்தும் செயல்பட்டதன் வாயிலாக இந்த அமர்வை நாம் மகிழ்ச்சியுடன் தொடங்க முடிந்தது அல்லவா?.

- .கோவிட் காலத்திற்கு பிந்தைய கல்வி நமக்கு சவாலாக உள்ளது. குழந்தைகள் பல பிரச்சனைகளுடன் பள்ளிக்கு வருகிறார்கள் அல்லவா? இந்தச் சூழ்நிலையை நீங்கள் எவ்வாறு எதிர் கொள்வீர்கள் ? அதற்கான செயல் வரிசையோ திட்டமோ தங்களிடம் உள்ளதா?

- அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குவதையே கேரள அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவு சார் சமூகத்திற்குத் தேவையான கல்வி முறைக்கு ஏற்றாற்போல நாம் எவ்வாறு மேம்படலாம்?
- கொரானாவின் போது மிகவும் சிறப்பாகச் செயல்பட்ட ஆசிரியர்களும் நம்மிடையே இருக்கிறார்கள் அல்லவா ? கோவிட் காலத்தில் செய்த சிறப்பான செயல்பாடுகளை, புதுமைகளை யாராவது பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா?
- போதுமான வாய்ப்பளித்தல்.
- சிறந்த அனுபவத்தை வெளியிட்ட ஆசிரியர்களைப் பாராட்டுதல்.

- கோவிட் காலம் ஆசிரியர்களை நவீன தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்த வாய்ப்புகளை உருவாக்கியது.
- பல்வேறு ஆன்லைன் முறைகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் வந்தன..
- கோவிடுக்குப் பிறகான கல்வி செயல்பாடுகளில் மீண்டும் நாம் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டுமா?
- ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ற விதத்தில் தொழில் நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? அவை தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

- கோவிட் காலத்தில் நடத்திய பல ஆய்வுகளும் மாணவர்கள் பெற வேண்டிய பல திறன்களும் பெற இயலாத இயலாத சூழல் ஏற்பட்டதாக கண்டடைந்துள்ளன.

- கோவிட் காலத்திற்குப் பிறகு குழந்தைகள் கல்வியில் மிகவும் பின் தங்கியுள்ளனர் என்ற பொதுக் கருத்து சமூகத்தில் பொதுவாகவே நிலவுகிறது.

- இதை மேம்படுத்தவும் மிகவும் பின்தங்கிய மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வரவும் நீங்கள் செய்த செயல்பாடுகள் எவை?
- (கலந்துரையாடல்)
- மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் SRG மற்றும் வகுப்பு PTA போன்ற பள்ளியில் செயல்படும் அமைப்புகள் புத்துயிர் பெற நாம் என்னென்ன செய்ய வேண்டும்?
- இப்போது உள்ள நிலை தொடர்ந்தால் போதுமா? அல்லது புதிய விதத்தில் செயல் முறையில் மாற்றம் தேவையா? புதிய தேவைகளுக்கு ஏற்ப அவற்றை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும்?

- பொதுக் கல்விப் பாதுகாப்புத் திட்டத்தின் அறிவுரைப்படி நாம் பள்ளிகளில் கல்வியியல் மாஸ்டர் பிளான் தயாரித்து செயல்படுத்த முனைந்த நேரத்தில் கோவிட் வந்ததன் காரணமாக அதைச் செயல்படுத்த இயலாத சூழல் உருவானது. தற்போதுள்ள சூழலில் . அந்த மாஸ்டர் பிளான்கள் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதா?

- இன்னும் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளம் உள்ளன. இந்த கல்வியாண்டில் நமது மாணவர்களின் கற்றல் முன்னேற்நத்திற்காக கருத்தில் கொள்ள வேண்டியவை எவை?

- போன்ற வற்றின் அடிப்படையில் இப் பயிற்சியின் வாயிலாக ஆசிரியர்களாகிய நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய மண்டலங்களாக நீங்கள் எவற்றையெல்லாம் எதிர்பார்க்கிறீர்கள்.

- உங்கள் எதிர் பார்ப்புகளை நமது வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிடுங்கள்

- நேரம் வழங்குதல்
- ஒவ்வொருவரும் வாட்ஸ் ஆப் குழுவில் பகிர்ந்த கருத்துகளில் சிறந்த கருத்துகளை Like செய்ய அறிவுறுத்தல்.
- அவற்றில் இருந்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த (1 Like செய்த) கருத்துரகளை RP ஒருங்கிணைத்தல்

- பொது நோக்கங்களை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிடுதல்

பொது நோக்கங்கள்.

1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளை (உணர்ச்சி, மற்றும் சமூகத் தொடர்பு அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி , நுண்தசை வளர்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன்) நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

2. அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கல்வி முறையை வலுப்படுத்தும் ஆராய்ச்சியாளர்களாகவும் கண்டடைவாளர்களாகவும் ஆசிரியர் களைத் திறன் பெறச் செய்து வட்டார அளவிலான ஆசிரியர்களின் கற்றல் குழுக்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

3. நவீன தொழில்நுட்பத்தின் உகந்த பயன்பாட்டின் மூலம் கற்பித்தல் மற்றும் கற்றலை உயர் நிலைக்கு கொண்டு வரும் திறன்மிக்க ஆசிரியர்களையும் பள்ளிகளையும் உருவாக்குதல்.

4. தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணையத்தின் பயன் பாட்டை உறுதி செய்து பள்ளியின் கற்றல் கற்பித்தல்

உத்திகளை மேம்படுத்துவதற்கான அடித்தளத்தை தயார் செய்தல்.

5. ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் எட்ட வேண்டிய கல்வி இலக்குகளை மனதில் கொண்டு முழுமையான பள்ளி அளவிலான கல்வித் திட்டத்தை வடிவமைத்தல் (அகாடமிக் மாஸ்டர் பிளான்) அவரவர் பள்ளிக்கு ஏற்றாற் போல பள்ளி அகாடமிக் மாஸ்ட்டர் பிளானை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்புகளை வழங்குதல்.

6. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

7. கலந்து கற்றல் முறைகளின் வாய்ப்புகள் மற்றும் செயல் வரிசை போன்றவை பற்றித் தெளிவு பெறுதல்.

பட்டறை : 1

நேரம் : 1 மணி நேரம் .

கற்றல் துணைக் கருவிகள்' : பாடல், சார்ட், மார்க்கர், முகமூடிகள். விளையாட்டுப் பொருட்கள்

நோக்கம் :

- கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளில் படைப்பாற்றல் வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட இடைவெளிகளைக் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

செயல் வரிசை.

RP

- நமக்கு ஒரு பாட்டுப் பாடலாமா. என்று சொல்லி ஒரு பாடலை அறிமுகம் செய்தல்.
- RP உடன் சேர்ந்து பங்காளிகள் இணைந்து பாடவும் பாடலைச் செய்கைப் பாடலாகப் பாடவும் வாய்ப்பளித்தல்

பாடல்

மயிலைப் போல ஆடலாம்

மானைப் போல ஓடலாம்

குயிலைப் போலப் பாடலாம்

குருவி போலப் பறக்கலாம்

குதிரை போலக் குதிக்கலாம்

கூகை போல அலறலாம்

தவளை போலத் தாவலாம்

தண்ணிரிலே நீந்தலாம்

பூனை போல பதுங்கலாம்

புலியைப் போல பாயலாம்

சிறுத்தை போலச் சீறலாம்

சிங்கம் போல நடக்கலாம்

பாடல் பிடித்ததா?

- இந்தப் பாடல் பாடும் போது உங்கள் மனதில் தோன்றிய உணர்வு என்ன?
- தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இது போன்ற பாடல்கள் பாடுவதால் வளரும் திறன்கள் எவை?
- கலந்துரையாடல்
- கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.

பங்காளி களை ஐந்து பேர் வீதமுள்ள குழுவாக்குதல் '

RP

- கொரோனா   நமக்கு மிகப் பெரிய அனுபவத்தைத் தந்து சென்றுள்ளது. இது நாட்டுக்கு நாடு ஊருக்கு ஊர் விட்டுக்கு வீடு   மனிதனுக்கு மனிதன் வேறுபடும் . குடும்பம், பள்ளி, சமூகம் போன்ற பல தளத்திலும் இதன் பாதிப்பை நாம் நேரடியாகவே உணர்ந்தோம் அல்லவா?
- கொரோனாக் காலக்கட்டத்தில்   திருமண நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க   தமது சொந்த பந்தங்களை அழைக்க முடியாத நிலை
- சக நண்பனின் குடும்ப நபரின்   இறுதிச் சடங்கில் கூட பங்கெடுக்க இயலாத   நிலை.
- பள்ளிக் கூடங்கள் திறந்து செயல்படுத்த முடியாத நிலை.
 என ஏராளம் நிகழ்வுகள் உண்டல்லவா ! .ஆசிரியர்களான நம்மைப் பொறுத்த வரையில்   ஆண் லைன் வகுப்புகள் அது தொடர்பான அனுபவங்கள் என ஏராளம் உள்ளன.
 கொரனாக் காலக்கட்டத்தில் பல நல்ல அனுபவங்கள் கிடைத்தவரும்   நம்மிடையே இருக்கலாம்.

இந்த அனுபவங்களை நாம் ஏதாவது ஒரு கலை வடிவத்தில் வெளியிட வேண்டும்

R P வெளியிட வேண்டிய பட்டியலை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிடல்

- கதை,
- பாடல்,
- நாட்டுப்புறக் கலைகள்,
- சிறுநாடகம் ,
- விளம்பரம் ,
- வில்லுப்பாட்டு ,
- ஒப்பனை,
- கும்மி ,
- கோலாட்டம்
- நாட்டுப்புறப் பாடல்
- ஒப்பனை
- திருவாதிரை
- கோலாட்டம்

  போன்று ஏதாவது ஒரு கலை வடிவத்தில் வெளியிட வேண்டும்
- ஒவ்வொரு குழுவும் ஒரு கலை வடிவத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் திட்மிட்டு ஒத்திகை பார்ப்பதற்குப் 15 நிமிடங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடும் போது குழுவில் உள்ள அனைவரின் பங்களிப்பும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- கவர்ச்சிகரமானதாகவும் இரசனைத் தன்மை மிகுந்ததாகவும் குழு வெளியீடுகள் அமைவது நல்லது.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடுவதற்கு ஐந்து நிமிடங்கள் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடுவதை அக்குழுவில் உள்ள ஒரு நபர் வீடியோ எடுத்து அதை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வேண்டும்.

- ஒரு குழு வெளியிடும் போது மற்ற குழுக்கள் அதைக் கவனித்து அவர்கள் வெளியிட்டதன் மேன்மைகளை வெளியிட வாய்ப்பளித்தல்.
- மொத்தத்தில் சிறப்பாகச் செய்த குழுவையும் சிறப்பாவதற்குக் காரண மான நிகழ்வுகளையும் பற்றி அவரவர் கருத்துகளை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப்பளித்தல்.

- RP நாம் இது வரை செய்த செயல் பாடுகள் படைப்பாற்றலோடு தொடர்புடையவை அல்லவா?

- இங்கு வெளியிட்ட செயல்பாடுகளின் தனித் தன்மைகள் எவை?
- இவற்றால் நமக்கு என்னென்ன திறன்கள் கிடைத்தன?
- ஒரு சிலருக்கு வெளியிட வாய்ப்பளித்தல்
- குழுவாக இணைந்து படைப்பாக்கச் செயல்பாடுகளில் பங்கக்கும் வாய்ப்பு.
- இணைந்து செயல்படுதல்.
- தலைமைப் பொறுப்பு
- குழுவின் வரைமுறைகளோடு பொருத்தப்படுதல்
- படைப்பாற்றல் திறனை வளர்த்தல்
  போன்ற பல கூறுகள் இதில் அடங்கியுள்ளன அல்லவா!
- இது போன்று படைப் பாற்றல் செயல்பாடுகளில் தனியாகவும் குழுவாக இணைந்தும் செயல்பட கொரோனாக் காலக் கட்டத்தில் நமது மாணவர்களுக்கு எந்த அளவிற்கு வாய்ப்புகள் கிடைத்திருக்கும்?
- எனில் ஒன்று முதல் நான்கு வரை படிக்கும் மாணவர்கள் களிடையே கொரானக் காலக்காட்டத்தில் படைப்பாற்றல் தொடர்பாக என்னென்ன கற்றல் இடைவெளி ஏற்பட்டிருக்கும்?

- அவற்றை நிவர்த்தி செய்வதற்காக என்னென்ன செயல்பாடுகள் வகுப்பறையில் வழங்கலாம்

போன்ற குறிப்புகளின் அடிப்படையில் கலந்துரையாட வாய்ப் பளித்தல்

- பங்காளிகளை நான்கு குழுக்கள் ஆக்குதல்.
- ஒவ்வொன்றும் பள்ளியின் ஒரு SRG எனவும் பள்ளிக்கு ஒரு பெயரும் ஒரு SRG ஒருங்கிணைப் பாளரையும் தேர்ந் தெடுக்கு மாறு கூறுதல்.
- படைப்பாற்றல் மண்டலம் தொடர்பாக ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை மாணவர்களில் ஏற்பட வாய்ப்புள்ள படைப்பாற்றல் இடைவெளிகளை வகுப்பு வாரியாக வரிசைப் படுத்த வாய்ப் பள்த்தல்,

- கண்டடைந்த இடைவெளிகளுக்குத் வழங்க வேண்டிய தீர்வுச் செயல்பாடுகளை உட்படுத்தி அட்டவணையை நிறைவு செய்தல்

மண்டலம்: படைப்பாற்றல் வளர்ச்சி

பள்ளியின் பெயர் :

வகுப்பு :

இடைவெளிகள் பிரச்சனைகள்	தீர்வு காண்பதற்கான செயல்பாடுகள்.	செயல் வரிசை

- கலந்துரையாடி எழுதவும் படைப்பாற்றல் தொடர்பான கற்றல் இடைவெளிகளுக்குத் தீர்வு எழுதவும் ஒவ்வொடு குழுவிற்கும் போதுமான நேரம் வழங்குதல் (15நிமிடங்கள்)
- CSRG ல் முன் கூட்டித் தயார் செய்த அட்டவணையை மேற்பார்வைக்காக வழங்குதல்.

- மண்டலம் : படைப் பாற்றல். வளர்ச்சி
-

கற்றல் இடைவெளி / பிரச்சனைகள்	அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான செயல் பாடுகள்.
கதைகள் பாட்டுகள் போன்றவை கேட்டு இரசிக்கவும் தன்னம்பிக்கை யுடன் பிறரின் முன்னிலையில் வெளியிடுவதற்குமான வாய்ப்புகள் குறைந்தன.	வகுப்பறையில் ஏராளமான கதைகள் பாட்டுகள் போன்றவற்றைக் கேட்டு இரசிக்கவும் பிறரின் முன்னிலையில் வெளியிடவும்வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்
படைப்பாற்றல் சுளில் ஏற்பட்டு தனது படைப்புத் திறனை வளர்த்துக்	கற்றல் செயல்பாடுகள் நடக்கும் போதே பாடச் செயல் வரிசையின் போது படைப்பாக்கச்

கொள்வதற்கான வாய்ப்புகள் குறைந்தன	செயல்பாடுகளில் பங்கெடுத்துத் தமது திறனை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும்
கற்றல் செயல்பாட்டின் வழியே குழுச் செயல்பாடுகளில் பங்கெடுக்கவும் (நாடகம் செய்கைப் பாடல் குழுப்பாடல்,) தனது பங்களிப்பை உறுதிப்படுத்து வதற்குமான வாய்ப்புகள் குறைவு மேலும் தமது கருத்துகளைப்பங்கு வைப்பதற் குமான வாய்ப்புகள் குறைந்தன.	கற்றல் செயல் பாட்டின் போது ஏராளமான குழுச் செயல்பாடுகளில் பங்கெடுப்பதற்கான வாய்புகள் வழங்க வேண்டும். குழுச் செயல் பாடுகளில் அனைவரும் பங்கெடுத்து அவரவர் கருத்தை வெளியிடுகின்றனர் என உறுதிப்படுத்த வேண்டும்
சுய சிந்தனையையும் கற்பனையும் வளர்ப்பதற்ன வாய்ப்புகள் வகுப்பறையில் குறைந்துள்ளன.	சுய சிந்தனையையும் கற்பனையையும் வளர்க்கும் ஏராளம் செயல்பாடுகள் வகுப்பறைகளில் வழங்க வேண்டும்.

- குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் ஒவ்வொரு குழுவும் வெளியிடுவதற்குத் வாய்ப்பு வழங்குதல்.
- வெளியிட்ட அட்டவணையில் இருந்து ஏதாவது ஒரு தீர்வுச் செயல்பாட்டை பொதுவாக வெளியிட வாய்ப்பளித்தல்
- வெளியிட்ட செயல்பாடு மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்த இயலுமா?
- இதில் என்னென்ன மாற்றங்கள் செய்தால் இதை மேலும் சிறப்புடையதாக மாற்றம் இயலும்?
- போன்ற குறிப்புகளின் அடிப்படையில் மாதிரிச் செயல்பாட்டை மேம்படுத்த வாய்ப்பளித்தல்..
- ஒருங்கிணைத்தல்.
- சேர்ந்து பாடுதல், சிற் சிறு விளையாட்டு களில் பங்கு பெறுதல், போன்றலற்றில் அனைத்து மாணவர்களின் பங்களிப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- வடிவமைத்தல், பாடலுக்கு மெட்டமைத்தல், வரைதல், வண்ணம் தீட்டுதல், போன்றவற்றிற்கு வாய்ப்பளித்தல்
- கதையைப் பாடலாக மாற்றுதல் பாடலைக் கதையாக மாற்றுதல் சூழலுக்கு ஏற்றாற் போல உரையாடலில் பங்கு

பெறுதல் மைமிங் தனியாள் நடிப்பு நாடகங்களில் பங் கெடுத்து கதைப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் வாய்ப்பு போன்றவை அடிக்கடி வழங்க வேண்டும்.

- ஒவ்வொரு வகுப்பின் குழந்தைகளின் வயது அனுபவம் போன்றவற்றிற்கு ஏற்பட்டாற் போல வழங்கும் செயல் பாடுகள் அமைய வேண்டும்.
- குழந்தைகளின் தனித்தன்மைகளையும் அவர்களின் படைப்பாக்கத் திறன்களையும் அடையாளம் கண்டு அதை மேலும் வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். .

- குழுக்கள் வெளியிட்டதை RP ஒருங்கிணைத்துக் கூறுதல்
- இது போன்று தீர்வுச் செயல்பாடுகளை SRG மற்றும் வகுப்பு தல PTA வின் உதவியுடன் ஒவ்வொரு வகுப்பிற்கும் தயார் செய்து குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப் படுத்த வேண்டும்.

.

.

பட்டறை : 2

நேரம் : 1 மணி நேரம் .

கற்றல் துணைக் கருவிகள்' : பாடல், சார்ட், மார்க்கர், முகமூடிகள். விளையாட்டுப்9 பொருட்கள்

நோக்கம் : 1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளில் மொழி மண்டலத்தில் ஏற்பட்ட இடைவெளிகளைக் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

செயல் வரிசை

RP

- நாம் ஓர் விளையாட்டு விளையாடலாம் என்று சொல்லி பங்காளிகளை இரு குழுவாக்குதல்
- ஒவ்வொரு குழுவிலும் சம எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல்.
- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்கள் சம பாதியாகப் பிரிதல்
- பகுதியாகப் பிரிந்தவர்களை 5 மீட்டர் இடை வெளி விட்டு நேர் எதிராக நிற்கச் செய்தல்.
- மொத்தம் 40 பேர் இருப்பதாக வைத்துக் கொண்டால் 20 பேர் வீதமுள்ள இரு குழுக்கள் ஒவ்வொரு குழுவிலும் 10 பேர் வீதம் நேர் எதிராக நிற்றல்.
- இனி விளையாட்டைத் தொடங்கலாம்.
- ஒவ்வொரு குழுவிலும் நிற்கும் முதல் நபர் கையில் ஒரு சிறிய பந்து வழங்கப்படும்.
- R P விசில் அடிக்கும் போது விளையாட்டு தொடங்க வேண்டும்.
- விசில் சத்தம் கேட்டவுடன் கையில் பந்துள்ள நபர் தனது உள்ளங் கையில் பந்தை ஏந்தியடி (பந்தைப் பிடிக் கக் கூடாது) நொண்டி விளையாடுவது போல் நொண்டிக் கொண்டே 5 மீட்டர் அப்பால் தனது குழுவில் உள்ள நபரிடம் பந்தைக் கொண்டு சேர்க்க வேண்டும்
- பந்தைப் பெற்ற நபர் முதல் நபர் செய்ததைப் போலவே உள்ளங் கையில் பந்தை ஏந்தியபடி நொண்டியடித்தபடியே தனது குழுவைச் சேர்ந்த எதிர் வசம் உள்ள நண்பரிடம் பந்தைச் சேர்க்க வேண்டும்.
- இவ்வாறு தொடர்ந்து விளையாட வேண்டும்.

- அக்குழுவில் உள்ள இறுதி நபர் பந்தை குழுக்களுக்கு மத்தியில் உள்ள வட்டத்தில் வைப்பதோடு விளையாட்டு நிறைவு பெறும்.
- வெற்றி பெற்ற குழுவைப் பாராட்டுதல்
- வெற்றி பெற்ற குழு வெற்றி பெற்றதற்கான காரணிகள் எவை?
- கலந்துரையாடுதல்
- விளையாட்டு பிடித்ததா?
- சரி நமக்கு ஒரு கதைப் பாடலை இரசிக்கலாமா?என்று சொல்லி முன்கூட்டி அமைத்த வாட்ஸ் ஆப் குழுவில் ஒரு கதைப் பாடலின் Link ஐ வெளியிடல்

https://youtube.com/watch?v=EaQ59_XEMHg&feature=share

- இந்தக் கதைப் பாடல் உங்களுக்குப் பிடித்ததா?காரணம் என்ன?
- இதில் வரும் கதைப் பாத்திரங்கள் எவை?
- கதை எவ்வாறு காட்சிப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்த செயல்பாட்டை வகுப்பறையில் வழங்கினால் இச்செயல் பாட்டின் வாயிலாக மாணவர்களுக்குக் கிடைக்க கூடிய மொழித் திறன்கள் எவை?.
- பங்காளிகள் அவரவர் கருத்துகளை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப்பளித்தல்.

- ஒரு மொழிச் செயல்பாடு என்ற முறையிலே இச்செயல்பாட்டோடு தொடர்பு படுத்தி என்னென்ன தொடர் செயல்பாடுகள் வழங்க முடியும்.?
- போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுதல்
- ஒரு சிலருக்குத் தங்கள் கருத்துகளைக் கூற வாய்ப் பளித்தல்.
- சரி நமக்கு ஒரு உரையாடல் எழுதலாம். சோகமாக இருந்த கொக்கிற்கும் குளத்தில் இருந்த மீண்களுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதவும்
- போதுமான நேரம் வழங்குதல்
- ஒரு சிலருக்கு வெளியிட வாய்ப்பு.
- மொழித் திறன் வளர்ப்பதற்கான ஏராளமான செயல் பாடுகளை இச் செயல்பாட்டின் தொடர்ச்சியாக வழங்கலாம் அல்லவா.
- உரையாடல் எழுதுதல், கதைப் பாத்திரங்களின் பெயர்களைக் கூறல், கதைப் பாத்திரங்களின் சிறப்புகளைக் கூறுதல்,

கதையைத் தொடர்ச்சியாக சொந்த நடையில் கூறுதல், கதையை மாற்றிக் கூறுதல், எழுதுதல் என்பன அவற்றுள் சில.

- அடிப்படை மொழித் திறன்களான கேட்டல் பேசுதல் வாக்கிய அமைப்போடு எழுதுதல் படைப்பாற்றலில் பங்கு பெறுதல் போன்ற மொழித் திறன்களை வளரச் செய்ய இந்தச் செயல்பாடு உதவும்.
- சரி –
- கடந்த ஒன்றரை வருடமாக பள்ளி அடைந்து கிடந்த சூழலில் இது போன்று நேரடி அனுபவம் தரக்கூடிய செயல்பாடுகள் வகுப்பறையில் நடைபெற வில்லை அல்லவா? அது மாணவர்களின் மொழித் திறனை எவ்வாறு பாதித்திருக்கும்?.
- கலந்துரையாடல்
- நாமே கண்டடைவோம்.
- பங்காளிகளை ஐந்து பேர் வீதமுள்ள குழுக்களாக மாற்றுதல்
- ஒவ்வொரு குழுவும் ஒரு பள்ளிக் குழுவாகக் கணக்கில் கொண்டு ஒரு SRG கன்வீனரைத் தேர்ந்தெடுத்தல்.
- SRG கன்வீனர் தலைமையில் கலந்துரையாடல்கள் நடத்த வாய்ப்பளித்தல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்று முதல் நான்கு வரை ஏதாவது ஒரு வகுப்பின் மொழி தொடர்பான கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண்பதற்கான செயல்பாடுகளை உட்படுத்தி வழங்கப்பட்டுள்ள அட்டவணையை நிறைவு செய்யப் போதுமான நேரம் வழங்குதல் (15 நிமிடங்கள்)
-
- மண்டலம்: மொழி வளர்ச்சி
- பள்ளியின் பெயர் :
- வகுப்பு :

இடைவெளிகள் பிரச்சனைகள்	தீர்வு காண்பதற்கான செயல்பாடுகள்.	செயல் வரிசை

-

SRG யில் தயாரித்த அட்டவணையை மேற்பார்வைக்காக வழங்குதல

- மண்டலம் : மொழி வளர்ச்சி.'

கற்றல் இடைவெளி / பிரச்சனைகள்	அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான செயல் பாடுகள்.
சூழ்நிலைக்கு ஏற்றவாறு தனது கருத்துகளை வாய்மொழியாக வெளியிட இயலுவதில்லை .	கற்றல் செயல் வரிசையில் அனைத்து மாணவர்களுக்கும் தங்களது கருத்துகளை வெளியிடவாய்ப்பளிக்க வேண்டும்.உரையாடலில் பங்கெடுக்கவும் கூச்சமின்றிப் பேசவும் வாய்ப்புகள் வழங்க வேண்டும்.
பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைப் புரிந்து கொள்ள இயலுவதில்லை.	சொல் அட்டைகள், வாக்கிய அட்டைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி சொற்களையும் எழுத்துகளையும் கண்டு வாசிப்பதற்கான ஏராளம் செயல்பாடுகள் வழங்க வேண்டும்
கருத்து உட்கொண்டு வாசித்துப் புரிந்து கொண்ட கருத்துகளைச் சொந்தநடையில் வெளியிட .இயலுவதில்லை	வாசிப்பதற்கான ஏராளம் செயல் பாடுகள். வழங்க . வேண்டும். மேலும் வாசித்துப் புரிந்து கொண்ட கருத்துகளைசொந்த நடையில் வெளியிட வாய்ப்புகள் வழங்க வேண்டும்
.எழுத்துச் செயல்பாடுகளில் தனது கருத்தை தவறின்றி எழுதி வெளியிட இயலுவதில்லை.	ஏராளமான எழுத்துச் செயல்பாடுகள் வழங்க வேண்டும். எழுத்துச் செயல்பாடுகளில் ஒவ்வொரு குழந்தையும் எதிர்கொள்ளும் பிரச்சனையை மதிப்பீடு செய்து அதற்குத் தேவையான பின்னூட்டச் செயல்பாடுகள் வழங்க வேண்டும். சுய மதிப்பீடு பரஸ்பர மதிப்பீடு போன்ற வற்றிற்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும். தகுந்த இடங்களில் மாதிரிகள்

	ஆசிரியர் படைப்பு போன்ற வற்றை வெளியிட வேண்டும். .
துணை எழுத்துகள் ஒற்றெழுத்துகள் போன்றவை தொடர்பான தவறுகள் ஏராளமாக எழுத்துச் செயல்பாடுகளில் பிரதி பலிக்கின்றன.	ஏராளமான எழுத்துச் செயல்பாடுகள் வழங்க வேண்டும் தனது தவறைக் குழந்தைகள் தானாக அடையாளம் காண வாய்ப்புகள் வழங்க வேண்டும். எழுதிய படைப்புகளைத் தனியாகவும் குழுவாகவும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும்.
சரியான வாக்கிய அமைப்பு முறையைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுத இயலவில்லை.	சிற் சிறு வாக்கியங்கள் சொல்லவும் சொன்ன வாக்கியங்களை எழுதுவதற்கும் வாய்ப்புகள் வழங்க வேண்டும் சொல் அட்டைகள் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைக்கவும் வரிசை மாற்றி வைக்கப்பட்ட வாக்கியங்களை மறு ஒழுங்கு செய்யவும் வாய்ப்பளித்தல்.
மாணவர்களின் படைப்புகளின் போதுமான கருத்துகள் வரிசைப் படுத்தப் படுவதில்லை	ஒவ்வொரு செயல்பாட்டின் போதும் கருத்துத் தெளிவு உருவாவதற்கான கலந்துரையாடல் நடைபெற வேண்டும். கருத்துத் தெளிவு ஏற்படுவதற்கான அதிகச் செயல் பாடுகளையும் தொடர் செயல்பாடுகளையும் அந்தந்தப் பாடப் பகுதியின் போதே வழங்க வேண்டும்
ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற வளர்ச்சி மாணவர்களின் படைப்புகளில் காணப் படுவதில்லை.	மாணவர்கள் தங்களது கருத்துகளை வெளியிடும் போது சுய மதிப்பீடு சக மதிப்பீடு போன்றவற்றிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.ஆசிரியர் படைப்பு வெளியிடப்பட வேண்டும்
மொழி வெளியிட்டு வடிவங்களின் தனித்தன்மைகள் படைப்புகளில் பிரதிபலிப்பதில்லை.	மொழி வெளியீட்டு வடிவங்களில் மாணவர்கள் எழுதும் போது ஒவ்வொரு மொழியீட்டு வடிவத்தின் தனித் தன்மையையும் அடையாளம் காணவும்

	அதன் அடிப்படையில் படைப்புகளை மேம்படுத்தவும் வாய்ப்பளித்தல்.
தனிப்பட்ட சுதந்திரமான படைப்பாற்றல் செயல்பாடுகளில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு .	சுதந்திமான தனிப்பட்ட படைப்புச் செயல்பாடுகளுக்கு வகுப்பறையில் ஏராளமான வாய்ப்புகள் வழங்க வேண்டும்
தனிப்பட்ட சுதந்திர படைப்புச் செயல் பாடுகளில் தனிப்பட்ட பாணியில்எழுத இயலுவதில்லை.	ஒவ்வொரு மாணவனின் தனிப்பட்ட எழுத்துமுறையின் சிறப்புகளை அடையாளம் காண்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்

- தயார் செய்த தீர்வுச் செயல்பாடுகளில் இருந்து ஒரு செயல்பாட்டை பொதுவாக வெளியிட வாய்ப்பளித்தல்

- ஒரு குழு வெளியிடும் போது மற்று குழுக்கள் அவை பற்றிக் கருத்துக் கூறவும் மேம்படுத்தவும் வாய்ப்பளித்தல்.

R P

- வெளியிட்ட செயல்பாடுகள் மொழி தொடர்பான கற்றல் இடை வெளிக்கு தீர்வு காண்பதற்காக எந்த அளவிற்குப் பொருத்தமாக உள்ளது.?
- குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளதா?
- இச் செயல்பாட்டை மேலும் சிறப்பு உடையதாக மாற்ற வேறு . என்னென்ன மாற்றங்கள் செய்யலாம்?
- போன்ற குறிப்புகளின் அடிப்படையில் கலந்துரையாடுதல்

ஒருங்கிணைத்தல்

- குழந்தையின் மொழி வளர்ச்சி வயது மற்றும் வகுப்பிற்கு ஏற்றாற் போல வேறு படுகிறது.
- மொழியைத் தொடர்ச்சியாகக் கையாளும் வாய்ப்புகளை உருவாக்கி வழங்க வேண்டும்.
- கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற அடிப்படை மொழித்திறன்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்றாற் போல மாணவர்களுக்குக் கிடைக்கின்றன என உறுதிப் படுத்த வேண்டும்.

- கதை கேட்டல் கதை சொல்லுதல் பாடல் கேட்டல் பாடல் பாடுதல் உரையாடலில் பங்கெடுத்தல் போன்ற வற்றில் தனியாகவும் குழுவாகவும் பங்கெடுக்க வாய்ப்புகள் உருவாக்க வேண்டும்.
- தமது கருத்துகளைச் சிற் சிறு வாக்கியங்காகக் கூறவும் கூறிய கருத்துகளை வரிசைப் படுத்தி எழுதவும் வாய்ப் பளித்தல்.
- சிற்சிறு வாசிப்பு அட்டைகள் கதைகள் மற்று மொழி வெளியீட்டு வடிவங்களை வாசித்துப் புரிந்து கொள்ளவும் புரிந்து கொண்ட கருத்துகளைச் சொந்த நடையில் வெளியிடவும் வாய்ப்பளித்தல்.
- மொழி வெளியீட்டு வடிவங்களின் சிறப்புகளை அறிந்து படைப்புச் செயல்பாடுகளில் பங்கெடுக்க வாய்ப்பளித்தல்.
- காலைக் கூட்டம் வகுப்புதல கலை இலக்கிய மன்றம் பள்ளி அளவிலான கலை இலக்கிய மன்றம். வட்ட மாவட்ட அளவிலான கலை இலக்கியப் போட்டிகளில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் ¡

இது போன்று நிவர்த்திச் செயல்பாடுகளை SRG மற்றும் வகுப்பு தல PTA வின் உதவியுடன் ஒவ்வொரு வகுப்பிற்கும் தயார் செய்து குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப் படுத்த வேண்டும்.

பட்டறை : 3

நேரம் : 1 மணி நேரம் .

கற்றல் துணைக் கருவிகள்' : பாடல், சார்ட், மார்க்கர், முகமூடிகள். விளையாட்டுப் பொருட்கள்

நோக்கம் : 1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளில் உடல் மற்றும் தசை மண்டலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி இடைவெளிகளைக் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

செயல் வரிசை

RP

- நாம் உற்சாகமாக இருப்பதற்கு கதை.பாட்டு, விளையாட்டு போன்றவை மிகவும் சிறந்ததல்லவா!.
- நாம் இணைந்து ஒரு பாடல் பாடுவோமா ?
- இந்தப் பாடலுக்கு ஒரு சிறப்பு உண்டு.
- இது குதிரை தொடர்பான பாடல்.எனவே நாம் அனைவரும் குதிரை மீது ஏறி அமர்ந்து சவாரி செய்வது போல ஆடிக்கொண்டே இப் பாடலைப் பாட வேண்டும்
- RP பாடலைப் பாடுதல். பங்காளிகள் சேர்ந்து பாட வாய்ப்பளித்தல்.

குதிரை -

குதிரை பார் குதிரை பார்

குதித்து ஓடிடும் குதிரை பார்

குதித்து ஓடிடும் போதினிலே

குளம்படி சத்தம் கேட்குது பார் (குதிரை)

இராஜா ஏறிய குதிரை இது

இராணி ஏறிய குதிரை இது

மன்னர் ஏறிய குதிரை இது

மந்திரி ஏறிய குதிரை இது (குதிரை)

வண்டி இழுக்கும் குதிரை இது
வாகாய் ஓடிடும் குதிரை இது
கொள்ளு தின்னும். குதிரை இது
கொம்பு இல்லாக் குதிரை இது (குதிரை)

கண்ணை மறைக்கக் கடிவாளம்
காலைக் காக்க ஒரு இலாடம்
தரையில் பறக்கும் பறவையெனத்
தாவிப் பாயும் குதிரை இது. (குதிரை)

பிடறியில் முடிகள் பறந்திடுமே
பின்னங் காலால் உதைத்திடுமே
பாய்ந்து ஓடும் வேளையிலே
பார்க்க அழகு பொங்கிடுமே. (குதிரை)

பாடல் பிடித்ததா?

- பாடலில் குதிரை தொடர்பாக என்னென்ன கருத்துகள் கூறப்பட்டுள்ளன.
- குதிரையை எங்கெல்லாம் பார்க்க முடியும்?
- குதிரை என்று சொன்னவுடன் உடனே நினைவிற்கு வருவது எது?
- நீங்கள் எப்போதாவது குதிரை சவாரி செய்துள்ளீர்களா?
- அனுபவம் பங்கு வைத்தல் .
- குதிரை மீது ஏறி சவாரி செய்ய நாம் என்னென்ன திறன் களைப் பெற்றிருக்க வேண்டும்?
- நமக்கு ஒரு குதிரைப் பந்தயம் காணலாமா?

- நமது வாட்ஸ் ஆப் குழுவைப் பார்வையிடுங்கள் அங்கே குதிரை ஓட்டம் தொடர்பான ஒரு வீடியோ பகிரப் பட்டுள்ளது.

https://youtu.be/m_yHZD4Rquo

- சிறப்பான பயிற்சிகள் பெற்றவரால் மட்டுமே குதிரை மீது சவாரி செய்ய முடியும்.
- குதிரை மீது சவாரி செய்வதற்கு மட்டும்தான் பயிற்சி தேவையா?
- கலந்துரையாடல்
- இனி நாம் ஒரு விளையாட்டு விளையாடுவோம்.
- முன்பே விளையாடிய விளையாட்டு போல இரு குழுவாகப் பிரிதல்.
- ஒவ்வொரு குழுவிலும் நபர்கள் சம எண்ணிக்கையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் சென்ற முறை பிரிந்தது போன்று சமமாகப் பிரியட்டும்.
- ஒவ்வொரு குழுவின் இரு பிரிவுகளுக்கு இடையே குறைந்தது 5 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.
- இம்முறை சற்று பெரிய பந்தைப் பயன் படுத்தலாம்
- RP விசில் அடிக்கும் போது விளையாட்டு தொடங்கும்.
- பந்து கையில் உள்ள நபர் முதலாவதாகப் பந்தை தனது இரு கால்களுக்கு இடையே வைத்து அதைக் கால்களால் இருகப் பிடிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவைச் சேர்ந்தவர்களும் போட்டியில் பங்கெடுப்பதற்காக ஐந்து மீட்டர் இடைவெளியில் தயார் நிலையில் நிற்க வேண்டும்
- RP யின் விசில் முழங்கிய வுடன் பந்து காலில் உள்ள நபர் பந்தைக் காலால் இருக்கமாகப் பிடித்தபடி விரைவாகச் சாடிச் சென்று தனது அணியைச் சேர்ந்த எதிரே நிற்கும் நபரிடம் வழங்க வேண்டும்
- இது போன்று மற்ற குழுவும் பந்தைக் கால் மாற வேண்டும்.
- பந்து காலில் இருந்து நழுவினால் விளையாடுபவர் பந்தை எடுக்க ஓடக்கூடாது.
- அவரது குழுவைச் சார்ந்த மற்றொருவர் அவருக்குப் பந்தை எடுக்க உதவ வேண்டும்.
- தொடர்ந்து இது போல் விளையாட வேண்டும்.

- இறுதி நபரின் காலுக்குப் பந்து வந்தடைந்தவுடன் அவர் பந்தைக் காலால் பிடித்தபடியே தாவிச் சென்து குழுக்களின் மத்தியில் உள்ள வட்டத்தில் வைக்க வேண்டும்
- எந்தக் குழு பந்தை முதலில் வட்டத்தில் வைக்கிறதோ அந்தக் குழு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.
- வெற்றி பெற்ற குழுவைப் பாராட்டுதல்
- இந்த விளையாட்டில் வெற்றி பெற உதவிய காரணிகள் எவை?
- கலந்துரையாடுதல்
- RP ஒருங்கிணைத்தல்
- குழுவாக இணைந்து செயல்படுதல்
- ஒவ்வொருவரும் அவரவர் பங்கைச் சிறப்பாகச் செய்தல்.
- ஒருவர் கவனக்குறைவாகச் செயல் படினும் அது குழுவின் வெற்றியைப் பொதுவாகப் பாதிக்கும் ?
- பந்தைக் காலால் பிடித்துக் கொண்டு தாவிய போது ஏற்பட்ட பிரச்சனைகள் எவை?
- இந்த விளையாட்டில் சிலரால் சிறப்பாகப் பங்கெடுக்க முடியாமைக்கு காரணம் என்ன?.
- இது போன்று விளையாட்டுகளில் முன்னனுபவம் பெறாமையும் ஒரு காரணமாக அமையலாம்.
- எந்த ஒரு செயலாக இருந்தாலும் அதை சிறப்பாகச் செய்ய சில பயிற்சிகள் தேவை.
- பயிற்சிகள் செய்யும்போது அதற்கேற்றாற்போல சில திறன்கள் தானாகவே வந்து சேருகின்றன.
- கலந்துரையாடுதல்.

RP

- இது போன்ற விளையாட்டுக்களை வகுப்பறைகளில் விளையாடும் போது என்னென்ன திறன்கள் மாணவர்களுக்குக் கிடைக்கும் ?
- கலந்துரையாடுதல்
- RP ஒருங்கிணைத்தல்.
- மகிழ்ச்சி
- மாணவர்கள் அறியாமலேயே பல நுண் தசைகளும் வலுப் பெறும்
- உடல் உறுதி பெறும்.
- நீங்கள் உங்களது குழந்தைப் பருவத்தில் என்னென்ன விளையாட்டு விளையாடி உள்ளீர்கள் ?
- நமது வாட்ஸ் ஆப் குழுக்களில் பங்கு வையுங்கள்.

- RP ஒருங்கிணைத்தல்
- கொத்தாங்கல்,
- கண்பொத்தி விளையாட்டு
- தாயம்
- கிட்டிப் புள்
- ஆடு புலி ஆட்டம்
- கபடி
- கிளித்தட்டு
- கொலை கொலையா முந்திரிக்கா
- கோலி விளையாட்டு
- பம்பரம் விளையாட்டு
- ஸ்கிப்பிங்
- தொட்டு விளையாட்டு.
- பந்து விளையாட்டு
- இது போன்று விளையாட்டுக்கள் விளையாடியதால் நீங்கள் பெற்ற திறன்கள் எவை?
- நமது குழந்தைப் பருவத்தில் விளையாடுவதற்குக் கிடைத்த வாய்ப்புகள் இப்போதுள்ள குழந்தை களுக்குக் கிடைக்கிறதா?
- கலந்துரையாடுதல்
- ஒரு சிலருக்கு வாய்ப்பு
- RP ஒருங்கிணைத்தல்
- பொதுவே பள்ளியிலும் வீட்டிலும் விளையாடுவதற்கான வாய்ப்புகள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது
- படித்தல், தொலைக்காட்சி காணல் . கைப்பேசி பயன்படுத்துதல் போன்றவற்றில் மாணவர் பொழுது போக்கும் சூழல் நிலவி வருகிறது.
- கடந்த ஒன்றரை வருட காலமாகப் பள்ளிகள் அடைந்து கிடந்த சூழலில் மாணவர்கள் வெளியில் சென்று விளையாடவும் பள்ளியில் வந்து விளையாடவும் இயலாத சூழல் நிலவி இருந்தது அல்லவா?
- இதன் காரணமாக நமது குழந்தைகள் என்னென்ன திறன்கள் பெற முடியாத சூழல் உருவாகி இருக்கும்?
- அவற்றிற்குத் தீர்வு காணும் விதமாக வரும் வருடத்தில் நாம் எத்தகைய செயல்பாடுகளை வழங்கலாம்?
- பங்காளிகளை ஐந்து பேர் வீதமுள்ள குழுவாக்குதல்
- ஒவ்வொரு குழுவும் ஒரு பள்ளி என்ற முறையிலே ஒரு SRG கன்வீனரைத் தேர்ந்தெடுத்தல்.

- குழுவில் இருந்து கலந்துரையாடி SRG ஒருங் கிணைப்பாளரின் தலைமையில் அட்டவணை தயார் செய்ய வாய்ப்பளித்தல்.
- ஒவ்வொரு குழுவும் ஒன்று முதல் நான்கு வரை ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கான அட்டவணை தயார் செய்தால் போதுமானது.

மண்டலம்: நுண் தசை வளர்ச்சி மண்டலம்

பள்ளியின் பெயர் :

வகுப்பு :

இடைவெளிகள், பிரச்சனைகள்	தீர்வு காண்பதற்கான செயல்பாடுகள்.	செயல் வரிசை

- குறிப்பிட்ட நேரம் வழங்குதல் (15 நிமிடம்)
- ஒவ்வொரு குழுவும் வகுப்பு தல கண்டடைவுகளையும் அதற்குத் தீர்வு காணும் செயல்பாடுகளையும் வெளியிட வாய்ப்பளித்தல்.
- CSRG யில் முன்கூட்டித் தயார் செய்த அட்டவணையை மேற்பார்வைக்காக வழங்குதல். .
-
- வளர்ச்சி மண்டலம்: : நுண் தசை வளர்ச்சி மற்றும் உடல் இயக்க மண்டலம்
-

கற்றல் இடைவெளி / பிரச்சனைகள்	அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான செயல் பாடுகள்.
வயதிற்கு ஏற்ற முறையில் நுண் தசைகள்வளர்ச்சியடையாத காரணத்தால் செயல்பாடுகளில் பங்கெடுக்க இயலாத நிலை	வகுப்பறை செயல்பாடுகளின் ஊடே ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் நுண் தசை வளர்ச்சி ஏற்படுவதற்கான பயிற்சிகள் வழங்க வேண்டும்.

நுண்தசைகளை வலுப்பெறச் செய்யும் பயிற்சிகள் கிடைக்காத சூழல்	தசை வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஏராளமான விளையாட்டுகள், பயிற்சிகள், போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்க வேண்டும்
விளையாடவும் உடலை உறுதி செய்யவும் சரியான உடற்பயிற்சி முறையை அறியாததுமான சூழல்.	ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற உடற்பயிற்சி முறைகளை அறிமுகம் செய்ய வேண்டும் படிப்பதைப் போலவே தினசரி விளையாடவும் உடற்பயிற்சிகளில் ஏற்படவும் வாய்ப்பளித்தல்
சேர்ந்து விளையாடவும், உடற்பயிற்சி செய்யவும் பள்ளிகளில் போதுமான வாய்ப்புக்கிடைக்காத சூழல்	ஒவ்வொரு வகுப்பிலும் போதுமான விளையாட்டுகள், உடற் பயிற்சிகள் நுண் தசை வளர்ச்சி தொடர்பான செயல்பாடுகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக வழங்குதல்
நாட்டுப்புற விளையாட்டுகளை விளையாட பள்ளியிலும் வீட்டிலும் போதுமான வாய்ப்புக் கிடைக்காத சூழல்.	நாட்டுப் புற விளையாட்டுகளின் முக்கியத்துவத்தை பெற்றோர்களிடம் விளக்கி வீட்டிலும் பள்ளியிலும் குறிப்பிட்ட நேரம் நாட்டுப்புற விளையாட்டுக்களில் பங்கெடுக்க வாய்ப்பு ஏற்படுத்துதல்.

R P

- ஒருங்கிணைத்தல்.
- ஆரம்பப் பள்ளி வகுப்புகளில் ஏராளமான நுண் தசை வளர்ச்சிப் பயிற்சிகளும் விளையாட்டுகளும் தொடர்ச்சியாக வழங்க வேண்டும். வகுப்பு ஆசிரியருக்கு இதில் முக்கியப் பங்கு உண்டு.

- மேலும் இது போன்ற செயல்பாடுகளை SRG மற்றும் PTA வின் உதவியுடன் ஒவ்வொரு வகுப்பிற்கும் தயார் செய்து குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப் படுத்த வேண்டும்.

R P

- உடல் திறன் மேம்படுத்துவதற்கான சில பயிற்சி வீடியோக்களை குழுவில் வெளியிடல்
- பயிற்சி வீடியோவை புரோஜக்டர் மூலமாக திரையில் வெளியிட்டு அது போன்று பயிற்சி செய்ய வாய்ப்பளித்தல்.

https://youtu.be/oc4QS2USKmk

https://youtube.com/channel/UCTIwFB4ciFi5ZCIu-VlwaOg

- இது போன்ற பயிற்சிகளை பள்ளியில் குறிப்பிட்ட நேரங்களில் வழங்குவது நல்லது.
- எந்தவொரு உடல் திறன் பயிற்சி வழங்குவதற்கு முன்பு ஆயத்தப் பயிற்சிகள் வழங்குவது நன்று.
- பள்ளி கால அட்டவணை தயாரிக்கும் போது விளையாட்டிற்கான பிரிவேளைகளிர் உட்படுத்தி அந்தப் பிரிவேளைகளில் ஆசிரியரும் மாணவருடன் இணைந்து பயிற்சியை வழிநடத்த வேண்டும்.
- வகுப்பிற்கு உள்ளேயே விளையாடக் கூடிய உடல் திறனை அதிகரிக்க உதவும் விளையாட்டுகளை வழங்கலாம்
- ஏரோபிக் போன்ற பயிற்சிகளை தினசரி குழந்தைகள் செய்கிறார்கள் என உறுதிப்படுத்தலாம்.
- காலைக் கூட்டத்தில் அனைத்து மாணவர்களையும் உட்படுத்தி உடல் தசை இயக்கப் பயிற்சிகள் வழங்கலாம்
- சூரிய நமஸ்காரம், யோகா போன்ற பயிற்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வாய்ப்புகள் வழங்கலாம்
- காத்தங்களைக் கத்திரிக்கோலால் வெட்டுதல் கையால் கீறுதல் போன்ற பயிற்சி களையும் வழங்கலாம்
- கரண்டியில் எலுமிச்சைப் பழத்தைக் கொளவிக் கொண்டு ஒருதல் ஓடிக்கொண்டு ஊசியில் நூல் கோர்த்தல் மியூசிக் சேர் சாக்கு ஓட்டம், தவளைச் சாட்டம் போன்ற விளையாட்டுகளை விளையாட வாய்ப்பளிக்கலாம்.

பட்டறை : 4

நேரம் : 1 மணி நேரம் .

கற்றல் துணைக் கருவிகள்' : பாடல், சார்ட், மார்க்கர், முகமூடிகள். விளையாட்டுப் பொருட்கள்

நோக்கம் : 1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளில் சமூக மற்றும் உணர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட இடைவெளிகள் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

RP

- சரி இனி நான் உங்களுக்காக ஒரு கதை காண்பிக்கிறேன் பாருங்கள் என்று சொல்லி பங்காளிகளின் வாட்ஸ் ஆப் குழுவிற்கு குரங்கும் சிட்டுக் குருவியும் U Tube வீடியோவை அனுப்பி வைத்தல்

https://youtu.be/bsyglAdokTg

- இது எது தொடர்பான கதை?
- கதையில் வரும் கதைப் பாத்திரங்கள் யாரெல்லாம் ?
- உங்களுக்குப் பிடித்த கதைப் பாத்திரம் எது?காரணம் என்ன?
- சிட்டுக்குருவிக்கு நேர்ந்த நிகழ்வைப் பற்றி நீங்கள் என்ன நினைக்குறிர்கள்?
- குரங்கு செய்தது சரியா?
- போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுதல்

RP

- உங்களது வாழ்க்கையில் எப்போதாவது இது போன்ற நிகழ்வு ஏற்பட்டது உண்டா?
- பங்கு வைக்க வாய்ப் பளித்தல்.
- இது போன்ற நிகழ்வுகளுக்கு என்ன காரணம்?
- கலந்துரையாடல்,
- ஒரு சிலர் தங்களது கருத்துகளைக் கூற வாய்ப் பளித்தல்.

- சரி இப்போது நான் நமது வாட்ஸ் ஆப் குழுவில் ஒரு வீடியோவைப் பகிர்ந்துள்ளேன்.அனைவரும் காணுக என்று சொல்லி வீடியோவைக் காண வாய்ப் பளித்தல்.
- பள்ளியில் அழுது கொண்டிருக்கும் மாணவனின் வீடியோ
- வீடியோவில் உள்ள மாணவனின் தற்போதைய மனநிலை என்ன?
- அவனிடம் ஏதாவது சொல்ல முனைபவர்களிடம் அவன் எவ்வாறு பிரதிபலிக்கக் கூடும்?
- மாணவர்களின் இத்தகைய மன நிலைக்குக் காரணம் என்ன?
- கலந்துரையாடுதல்
- மாணவர்களைப் புரிந்து கொள்ளாமை,
- மன மகிழ்வு ஏற்படும் செயல்பாடுகளில் பங்கெடுக்க வாய்ப்பு வழங்காமை.
- மாணவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் நடந்து கொள்ளுதல்
- உட்பட பல காரணங்களும் இருக்கலாம்.
- மாணவனின் இந்த நிலை தொடர்ந்தால் அது மாணவனை எவ்வாரெல்லாம் பாதிக்கும் ?
- இந்தச் சூழல் சமூகத்தை எவ்வாறு பாதிக்கும்?
- தன்மைம்பிக்கை
- சமூகத் தொடர்பு
- பெற்றோர் ஆசிரியர் மற்றும் மூத்தோர்களை மதித்தல்
- விட்டுக் கொடுத்தல்
- சக நண்பர்களுடன் அன்போடு பழகுதல் போன்றவற்றில் பின்னோக்கம் செல்ல வாய்ப்புண்டு அல்லவா..
- இது போன்ற மாணவர்கள் நமது பள்ளியிலும் நமது வகுப்பிலும் இருப்பார்கள் அல்லவா?
- அவர்களை கற்றலில் விருப்பம் உள்ள மாணாக்கராக மாற்ற வேண்டியது நமது கடமை தானே?
- ஆசிரியர்களை நான்கு குழுக்களாக்குதல், ஒவ்வொரு குழுவிலும் (ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை)
- ஒரு குழு ஒரு பள்ளி என்ற முறையில் ஒரு SRG கன்வீனரைத் தேர்ந்தெடுத்து அவரது தலைமையில் பிரச்சனைகளையும் தீர்வுச் செயல்பாடுகளையும் எழுதி வெளியிட வாய்ப்பளித்தல்
- வொரு குழுவும் RP யின் அறிவுரைப்படி குறிப்பிட்ட வகுப்பு (ஒன்று முதல் நான்கு வரை) தொடர்பான செயல்பாடுகளை தயார் செய்தால் போதுமானது.

- குழந்தைகளுக்கு இத்தகைய பிரச்னைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுச் செயல்பாடுகள் போன்ற வற்றை பட்டியலிட வாய்ப் பளித்தல்.

மண்டலம்: சமூக உறவு மற்றும் உணர்ச்சி மண்டலம்

பள்ளியின் பெயர் :

வகுப்பு :

இடைவெளிகள் பிரச்சனைகள்	தீர்வு காண்பதற்கான செயல்பாடுகள்.	செயல் வரிசை

- குறிப்பிட்ட நேரம் வழங்குதல் (15 நிமிடம்) .
- CSRG யில் முன்கூட்டித் தயார் செய்த அட்டவணையை மேற்பார்வைக்காக வழங்குதல்.
- மண்டலம்: சமூக உறவு மற்றும் உணர்ச்சி மண்டலம்
-

கற்றல் இடைவெளி / பிரச்சனைகள்	அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான செயல் பாடுகள்.
ஆசிரியர் மற்றும் உடன் பயிலும் மாணவர் களுடன் இணைந்து செயல்பட இயலாத நிலை.	தனிப்பட்ட முறையிலே ஏதாவது பிரச்சனை உள்ளதா? என ஆய வேண்டும். குடும்ப சூழல் உட்பட துணுக்கமாக காய்தல். இத்தகைய மாணாக்கருடன் இன்முகத்தோடு பழகுதல் .
தனியாகவோ கழுவாகவோ விளையாட விருப்பம் இல்லாத நிலை	தனிப்பட்ட முறையிலே கவனித்து மெள்ள மெள்ள விளையாட்டுகளில் பங்கெடுக்கும் ஆர்வத்தை வளர்த்தல்.
சக மாணவர்கள் ஆசிரியர், மற்றும் மற்று சமூக	பரஸ்பரம் மற்றுள்ள சக தோழர்களுடன் அன்போடு பழகவும் பெற்றோர்

உறுப்பினர்களுடன் எவ்வாறு பழகுவது என அறியாத சூழல்	மூத்தோர் ஆசிரியர் போன்றவதோடு பழகுதல் தொடர்பான அனுபவங்கள் கிடைக்கவும் செய்தல்.
மந்துள்ளவர்களோடு அடிக்கடி கோபப்படுவது, அழுவது, எப்போதும் மற்துள்ளவர்களைத் திட்டுவது துன்பப் படுத்துவது போன்ற செயல்களில் ஏற்படுவது	குழந்தையின் குடும்ப சூழலை அறிய வேண்டும். தழந்தையிடம் வீட்டில் உள்ளவர்கள் எவ்வாறு தொடர்பு வைத்துள்ளனர் குழந்தையின் மன அழுத்தத் திற்கான காரணம் போன்றவற்ற அறிந்து அதற்கேற்றாற்போல மாற்று நடபடிக்கைகள் செய்ய வேண்டும்.. குழந்தைகளின் விருப்பத்தை அறிந்து செயல்பட வேண்டும், விளையாட்டுகளில் பங்கெடுத்தல் பாடல் கதை கேட்டல் கழுவாக இணைந்து விளையாடுதல் போன்ற மன மகிழ்ச்சி தரும் செயல்பாடுகளில் பங்கெடுக்க வாய்ப்பு வழங்குதல்.,
தனிமையிலேயே அமர்ந்திருப்பது. வகுப்புச் செயல்பாடுகளில் பங்கெடுக்க விரும்பமின்மை.	கழந்தைக்கு விருப்பமான செயல்களிலும் விளையாட்களிலும் பங்கெடுக்க வாய்ப்படுத்தல்
பெற்றோர் மூத்தோர் ஆசிரியர் போன்றோருக்கு வழங்க வேண்டிய மதிப்பு மரியாதை போன்றவை பற்றிப் போதுமான அனுபவம் கிடைக்காத சூழல்	குழந் களின் பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பு தொடர்பான உளவியல் வழங்கல்
கழந்தை வளர்ப்பு தொடர்பான Good Paranting விழிப்புணர்வு இல்லாத பெற்றோரினால் மற்றவர்களுடன் சரியாக இணைந்து செயல்பட இயலாத சூழல்	குழந் களின் பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பு தொடர்பான உளவியல் வழங்கல்.

- ஒவ்வொரு குழுவும் வகுப்பு தல கண்டடைவுகளையும் அவற்றிற்குத் தீர்வு காணும் செயல்பாடுகளையும் தயார் செய்து வெளியிட வாய்ப்பளித்தல்.
- அதிலிருந்து ஒரு தீர்வு காணும் செயல்பாட்டை ஒவ்வொரு குழுவும் வெளியிட வாய்ப்பளித்தல்

R P

- ஒருங்கிணைத்தல்.
- மாணவர்களை உள இயல் அடிப்படையில் அணுக வேண்டும். குழந்தைகளின் தன்மைகளுக்கு ஏற்ற செயல்பாடுகளை வழங்க வேண்டும்.
- விளையாடுதல் குழுவாகக் கற்றல் கதை கேட்டல் கதை கூறல் கழுவாகச் சேர்ந்து செய்கைப் பாடல்களைப் பாடுதல் போன்ற மகிழ்ச்சி தரும். செயல்பாடுகளை வகுப்பறையில் அடிக்கடி நடத்த வேண்டும்.

- இது போன்று தீர்வு காண உதவும் செயல்பாடுகளை SRG மற்றும் வகுப்பு தல PTA வின் உதவியோடு தயார் செய்து குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப் படுத்த வேண்டும்.

பட்டறை : 5

நேரம் : 1 மணி நேரம் .

கற்றல் துணைக் கருவிகள்' : பாடல், சார்ட், மார்க்கர், முகமூடிகள். விளையாட்டுப் பொருட்கள்

நோக்கம் : 1. கோவிட் மூலம் குழந்தைகளில் ஏற்பட்ட கற்றல் மற்றும் வளர்ச்சி இடைவெளிகளில் அறிவு வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட இடைவெளிகள் கண்டடைந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், ஒவ்வொரு குழந்தையும் கற்றல் வெற்றியை அனுபவிக்க உதவுவதற்கும் ஆசிரியர்களை தயார் செய்தல்.

- செயல் வரிசை :
- பங்காளிகளின் உதவியோடு ஏதாவது ஒரு டிப் ஆக்டிவிடியை நடத்துதல்.

R P

- பங்காளிகளை நான்கு .குழுவாக மாற்றுதல்
- வாட்ஸ் ஆப் குழுவில் கீழ்வரும் பாடலை வெளியிடுதல்
- ஒவ்வொரு குழுவும் அவரவருக்கு விருப்பமான முறையில் மெட்டமைத்து பாடலை வெளியிட வாய்ப்பளித்தல்.
- ஒரு குழு வெளியிடுவதை மற்று குழுவில் உள்ளவர்கள் கவனிக்கச் செய்தல்.

எந்தன் தோட்டப் பூவே

உன்னை ஒன்று கேட்பேன்

எந்தன் தோட்டப் பூவே

பச்சைச் செடியில் இத்தனை நாள்

பதுங்கி நீயும் எங்கிருந்தாய்?

காற்றில் ஒளியில் நானிருந்தேன்

மண்ணில் நீரில் நானிருந்தேன்

எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்ததுமே

பூவாய் நானும் மலர்ந்தேனே

அம்மா அப்பா போல் நானும்
அழகாய்ப் பிறந்து இருக்கின்றேன்
பச்சைச் செடியில் பிறந்தும் நீ
பச்சைப் பூவாய் ஏனில்லை.

பச்சைப் பூவாய் நானிருந்தால்
யார்க்கும் பார்க்க முடியாது.
வண்ண வாசம் இருப்பதனால்
வண்டுக்கு வழியும் தெரிகிறதே'

R P

- இந்தப் பாட்டில் வரும் கதைப் பாத்திரங்கள் யாரெல்லாம் ?
- குழந்தைக்கு வந்த முதல் சந்தேகம் எது?
- அதற்குப் பூ என்ன பதில் சொன்னது?
- தொடர்ந்து குழந்தைக்கு வந்த சந்தேகம் என்ன?
- அதற்குப் பூ என்ன பதில் சொன்னது?
- உங்களுக்கு இது போன்று எப்போதாவது எதைப் பற்றியாவது சந்தேகம் வந்துள்ளதா?
- என்ன சந்தேகம். ?'
- ஒரு சிலருக்குத் தங்களது சந்தேகங்களை, இவளியிட வாய்ப்பளித்தல்.
- ஒரு குழந்தை பிறக்கும் போது ஒன்றுமே இல்லாத வெறும் வெற்று CD போல பிறக்கிறது
- ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் அனுபவங்களின் அடிப்படையில் அவர்களின் அறிவு வளர்கிறது.
- ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் அனுபவங்களின் அடிப்படையில் ஒவ்வொருவரும் பெரும் அறிவில் வேறுபாடு உண்டாகிறது.

RP

- ஒன்று முதல் நான்கு வரை வகுப்புகளில் நமது மாணவர்கள் பெற வேண்டிய சுற்றுச் சூழல் தொடர்பான அறிவு வளர்ச்சிகள் எவை?
- கலந்துரையாடுதல்

- தனிநபர் பழக்க வழக்கங்கள் தொடர்பான அறிவு.
- குடும்பம் தொடர்பான அறிவு
- உற்றார் உறவினர் தொடர்பான அறிவு
- சுற்றுச்சூழல் தொடர்பான இயற்கை அமைப்பு மற்றும் இயற்கைக் காட்சிகள் தொடர்பான அறிவு
- மழைக்காலம் வெயில் காலம் காலநிலை மாற்றம் தொடர்பான அறிவு
- சுற்றிலும் உள்ள உயிரினங்கள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் தொடர்பான அறிவு
- பொது ஸ்தாபனங்கள் தொடர்பான அறிவு
- தாவரங்கள் அவற்றின் சிறப்புத் தன்மைகள் தொடர்பான அறிவு
- பழங்கள், காய்கறிகள் தொடர்பான அறிவு
- என தொடக்கப் பள்ளியில் கிடைக்க வேண்டிய இன்னும் ஏராளம் அறிவுகள் உள்ளன.

- கணிதம் தொடர்பான அறிவு வளர்ச்சிகள் எவை?
- எண்ணறிவு
- ஏறு வரிசை இறங்கு வரிசை
- எண் விளக்கம்
- சிறிய எண் பெரிய எண்
- கூட்டல் , கழித்தல் உட்பட நால்வகைச் செயல்பாடுகள்.
- சிறிய நடைமுறைப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் திறன்.
- அளவுகள்
- வடிவங்கள்
- தூரம்
- பெரியது , சிறியது
- இது போன்று ஏராளம் கணித அறிவுகளையும் சுட்டிக் காட்டலாம்.
- கடந்த ஒன்றரை ஆண்டுகளாகப் பள்ளி அடைந்து கிடந்ததன் காரணமாக குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் என்னென்ன இடை வெளிகள் ஏற்பட்டிருக்கக் கூடும்?

- கலந்துரையாடுதல்

-
- போன்றவை தொடர்பான தங்களது கருத்துகளை வெளியிட வாய்ப் பளித்தல்

- பங்காளிகளை நான்குகுழுவாக்குதல்

- ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற முறையில் மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் ஏற்பட்ட இடைவெளிக்குத் தீர்வு காண உதவக் கூடிய வகையில் என்னென்ன செயல் பாடுகள் வழங்கலாம்.

- RP ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வகுப்பிற்கான செயல்பாடுகளை வடிவமைக்கும் பொறுப்பை வழங்குதல்.
- CSRG யில் முன்கூட்டித் தயார் செய்த அட்டவணையை மேற்பார்வைக்காக வழங்குதல். .. -
-
- ஒரு குழு ஒரு பள்ளி என்ற முறையில் ஒரு SRG கண்வினரைத் தேர்ந்தெடுத்து அவரது தலைமையில் பிரச்சனைகளையும் தீர்வுச் செயல்பாடுகளையும் எழுதி வெளியிட வாய்ப்பளித்தல்.
- அதிலிருந்து ஒரு தீர்வு காணும் செயல்பாட்டை ஒவ்வொரு குழுவும் வெளியிட ..
- மண்டலம் : .அறிவு வளர்ச்சி மண்டலம்

கற்றல் இடைவெளி / பிரச்சனைகள்	அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான செயல் பாடுகள்.
ஒவ்வொரு வகுப்பிற்கும் குறிப்பிட்ட வயதிற்கும் தகுந்த அறிவு வளர்ச்சியை பெறாத சூழல்.	வகுப்பின் மொத்தப் பிரச்சனையா குழந்தையின் தனிப்பட்ட பிரச்சனையா என்பதைக் கண்டடைந்து தகுந்த அனுபவ அறிவு கிடைப் பதற்கான வாய்ப்பு உருவாக்க வேண்டும்.
ஐம்புலன்களின் உதவியோடு புதிய அறிவு பெறுவதற்கும் பெற்ற அறிவைத் தகுந்த சூழலில் பயன்படுத்த இயலாததுமான சூழல்.	ஐம்புலன்களின் உதவியோடு அறிவு பெறுவதற்கும் பெற்ற அறிவை தகுந்த சூழலில் பயன்படுத்தவும் அவசியமான சூழல்கள் வகுப்பறையில் வடிவமைத்து வழங்குதல்.
ஒவ்வொரு வகுப்பிலும் உருவாக வேண்டிய அடிப்படை அறிவுகள் உருவாவதற்கான வகுப்பறைச் செயல்பாடுள்	ஒவ்வொரு வகுப்பிலும் கருத்துருவாக்கம் நடத்துவதற்கு அவசியமான கற்றல் கற்பித்தல் செயல் வரிசையை உறுதிப் படுத்த வேண்டும்..

மூலமாக முழுமையான உருவாக்கம் நடைபெறாத சூழல்,	
உற்று நோக்கல், தனித்தன்மைகள் வரிசைப் படுத்துதல் வகைப்படுத்துதல் முடிவுக்கு வருதல் உட்பட தொடக்கப் பள்ளியில் பெற வேண்டிய அடிப்படைச் செயல் திறன்கள் அடையாத சூழல்	சூழ்நிலை இயல் தொடர்பான அடிப்படைச் செயல் திறன்கள் பெறும் விதமாகவும் அறிவு உருவாக்கத்திற்கு ஏற்ற முறையில் உதவும் வகையில் வகுப் பறைச் செயல்பாடுகளின் செயல் வரிசையை உறுதிப் படுத்த வேண்டும்
அந்தந்த வகுப்பிற்கும் வயதிற்கும் ஏற்ற கணித அறிவு பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்காத சூழல்	ஒவ்வொரு வகுப்பிலும் பெற வேண்டிய கற்றல் அறிவு மற்றும் திறன்கள் பெறும் விதத்திலே வகுப்பறைச் செயல்பாடுகளுக்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

•

மண்டலம்: அறிவு வளர்ச்சி மண்டலம்

பள்ளியின் பெயர் :

வகுப்பு :

இடைவெளிகள் பிரச்சனைகள்	தீர்வு காண்பதற்கான செயல்பாடுகள்.	செயல் வரிசை

- குறிப்பிட்ட நேரம் வழங்குதல் (15 நிமிடம்)

- ஒருங்கிணைத்தல்.
- படங்கள் , கதைகள் பாடல்கள் மூலமாக அறிவு வளர்ச்சிக்கு உதவக் கூடிய செயல்பாடுகளை வடிவமைத்து வழங்க வேண்டும்.
- சுற்றுப்புறத்தை உற்று நோக்கி அதன் சிறப்புகளைக் கண்டடைவதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும்.
- ஐம்புலன்களைப் பயன்படுத்தி அறிவு உருவாக்கத்தில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும்.
- தொழில்நுட்பம் தகவல் தொழில் நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரடி அனுபவம் பெறக் கூடிய வாய்ப்புகளை வகுப்பறையில் உருவாக்க வேண்டும்.
- அறிவு உருவாக்கம் நடை பெறுவதற்குத் துணை புரியும் செயல் வரிசையில் வகுப்பறைச் செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.
- எளிய செயல் திட்டங்கள், எளிய பரிசோதனைகள், போன்றவற்றில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்க வேண்டும்
- நேரடியாக பொது நிறுவனங்களைப் பார்வையிடுவதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும்
- உற்று நோக்குதல், சிறப்புகளைக் கண்டடைதல் வகைப் படுத்துதல் முடிவிற்கு வருதல் போன்றவற்றிற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- உல்லாச கணிதம் போன்ற எளிய செயல் வரிசை வாயிலாக கணிதக் கருத்துகளை எட்டுவதற்கு வாய்ப்புகள் உருவாக்கு வேண்டும்.
- எண்ணறிவு பெறுவதற்கான கவர்ச்சிகரமான செயல்பாடுகளை வடிவமைத்து வழங்க வேண்டும்.
- ஈர்க்கிள் கம்புகள் குச்சிகள் மஞ்சகாடிகள் முத்துகள் போன்றவற்றைப் பயன்படுத்தி எண்ணவும் கூட்டங்கள் ஆக்குவதற்குமான செயல்பாடுகள் வழங்க வேண்டும்.
- படங்களை உட்படுத்திப் பயிற்சித்தாள்கள் வடிவமைத்து லழங் வழங்கி தொடர்ச்சியா கூடுதல் அனுபவங்கள் கிடைப்பதற்கான அனுபவங்களை வகுப்பறையில் வழங்க வேண்டும்.
- கூட்டல், கழித்தல் போன்ற வற்றை முத்துகள் மஞ்சகாடிகள் போன்றவை மூலம் சிறிய வகுப்புகளில் செய்து கற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

- அனுபவம், மொழி படங்கள் சின்னங்கள் என்ற வரிசையில் ELPS (Experience Language, Picture Simbol) என்ற முறையிலே எண் அறிவு கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவிக்க வேண்டும்
- மாணவனுக்கு பழக்கமான அனுபவம் உள்ள சிற் சிறு பிரச்சனைகளை வடிவமைத்து தீர்வு காண்பதற்கான செயல்பாடுகளைத் தொடர்ச்சியாக வகுப்பறையில் வழங்க வேண்டும்.
- மறு ஒழுங்கு படுத்தக் கூடிய கூட்டல் கழித்தல் போன் நவற்றிற்கு கற்றல் துணைக் கருவிகளை வடிவமைத்து எண் அட்டைகளின் உதவியுடன் வகுப்பில் தொடர்ச்சியான நேரடி அனுபவம் கிடைக்கும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை எளிமையில் இருந்து சிக்கலுக்கு என்ற முறையிலே எளிய செயல்பாடுகளை முதலில் வழங்கி பின் சிக்கலான செயல்பாடுகளை வழங்கித் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- பெருக்கல், வகுத்தல் தொடர்பான செயல்பாடுகள் தொடர்ச்சியாக வகுப்பறையில் எளிமைப் பாத்தி வழங்க வேண்டும்.
- நேரம் தூரம் அளவுகள் வடிவங்கள் போன்றவை தொடர்பான திறன்கள் பெற தொழில் நுட்டத்தின் வாய்ப்புகளை வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்

- இது போன்று தீர்வுகானும் செயல்பாடுகளை SRG மற்றும் வகுப்பு தல PTA வின் உதவியுடன் ஒவ்வொரு வகுப்பிற்கும் தயார் செய்து குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப் படுத்த வேண்டும்.

பட்டறை : 6

குழந்தையை அறியலாம்.

நேரம் : 60 நிமிடங்கள்.

- நோக்கம் : மாணவர்களின் தனித் தன்மைகள் திறன்கள் . இயல்புகள் கற்றல் இடைவெளிகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் போன்றவற்றைப் பகுத்தறிந்து மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கும் அவர்களது உயர்ந்த கற்றல் நிலையை அடைவதற்கும் உதவி செய்யும் வகையில் வகுப்பறைச் செயல் பாடுகளை வடிவமைக்க ஆசிரியர்களைத் தயார் செய்தல்

செயல் வரிசை

RP

- வாட்ஸ் ஆப் குழுவில் பாரதியாரின் பாப்பாப் பாட்டை வெளியிடுதல்.
- நீங்கள் பாரதியாரின் பாப்பாப் பாடலைப் பல முறை பாடி இருப்பீர்கள் அல்லவா?
- இங்கே பாரதியாரின் பாப்பாப் பாட்டு முழுமையாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

- அதிலிருந்து உங்களுக்குப் பிடித்த ஏதாவது நான்கு வரிகளை மெட்டமைத்துப் பாட வேண்டும்.
- அனைவரும் கண்டிப்பாக அவரவர் பங்களிப்பை உறுதிப் படுத்த வேண்டும்.
- தாம் தேர்ந்தெடுத்த பாடல் வரிகள் பிடித்ததற்கான காரணத்தையும் வெளியிட வேண்டும்
- விருப்பமுள்ள மெட்டில் பாடலாம்.
- ஒருவர் பாடும்போது மற்றுள்ளவர் இணைந்து பாடவும் செய்யலாம்.

பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா, - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா, - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மைஆடு, - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்

சோர்ந்துவிட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்ததெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா, - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங்குழந்தை நொண்டி, - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா, - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே, - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா;
செல்வம் நிறைந்த ஹிந்து ஸ்தானம் - அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,
கிடக்கும் பெரியகடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

வேத முடையதிந்த நாடு, - நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு,
சேதமில் லாதஹிந்து ஸ்தானம் - இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்; - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்; - இது
வாழும் முறைமையடி பாப்பா.

- பாரதி

- போதுமான நேரம் வழங்குதல்
- இங்கே பாரதி கையாண்டுள்ள பாப்பாவை நமது குழந்தைகளாக எடுத்துக் கொண்டால் பாரதியின் கண்ணோட்டத்தில் குழந்தைகள் எவ்வாரெல்லாம் இருக்க வேண்டும் என பாரதி எண்ணியுள்ளார்?
- அவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்?
- கலந்துரையாடல்
- நமது வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களின் திறனும் ஒரே போன்று உள்ளதா? கலந்துரையாடல்
- நமது வகுப்பு மாணவர்கள் வேறுபட்ட நிலைகளில் உள்ளார்கள் அல்லவா?
- அவர்களைக் கையாளுதல் எப்படி ?
- நமது வகுப்பிற்கு வரும் போது மாணவனின் கற்றல் நிலை, அம்மாணவனின் சிறப்புத் திறன்கள், அவனது பின்னோக்க நிலை, அம்மாணவனைக் கை பிடித்து உயர்த்த நாம் மேற்கொண்ட செயல் வரிசைகள் போன்றவற்றை சமூகத்திடம் சுட்டிக் காட்ட நமது கைவசம் உள்ள சாட்சிகள் எவை?

- ஒரு மாணவனை முழுமையாக அறிய நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும்?
- நமது குழந்தைகள் தொடர்பாக நாம் சேகரித்த விபரங்களை நாம் எங்கே குறித்து வைக்கிறோம்.?
- மாணவர்களை முழுதுமாக அறிவதால் நமக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் நன்மைகள் எவை?
- போன்ற கலந்துரையாடல் குறிப்புகளின் அடிப்படையில் கலந்துரையாடுதல்.

R P ஒருங்கிணைத்தல்

- ஒவ்வொரு குழந்தையின் சமூகச் சூழல் மற்றும் பல்வேறு வளர்ச்சி மண்டலங்களின் நிலை அவர்களின் கற்கும் திறன் போன்றவை வேறுபட்டதாக இருக்கும்.
- ஒவ்வொரு குழந்தையையும் ஒரு அலகாகக் கண்டு கொண்டு அதன் வளர்ச்சி நிலைகளுக்கு உதவும் விதத்தில் நமது திட்டமிடலை நடத்த வேண்டும்.
- குழந்தைகளின் தற்போதைய நிலை, நாம் செய்த உதவிகள் SRG மற்றும் PTA வில் இருந்து கிடைத்த உதவிகள் குழந்தையில்

வந்த மாற்றம் போன்றவற்றை சரியான முறையில் அடையாளப்படுத்தி வைக்க வேண்டும்.

- குழந்தைகளின் படைப்புத் தொகுப்பை மேம்படுத்தி அவர்களது கற்றல் வளர்ச்சியை பெற்றோர் மற்றும் சமூகம் அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்.
- ஒவ்வொரு குழந்தையையும் சரியான தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து சரியான பின்னூட்டம் வழங்குதல்
- ஆசிரியர் கையேட்டில் திட்டமிடல் நடத்தும் போது ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்க வேண்டிய பின்னூட்டத்தை உட்படுத்த வேண்டும்.
- கற்பித்தல் முடிந்த பின் ஒவ்வொரு மாணவின் கற்றல் நிலை அவனுக்கு வழங்க வேண்டிய பின்னூட்டம் போன்றவற்றைக் கற்பித்தல் கையேட்டில் குறித்து வைத்து தொடர் வகுப்பு களில் பின்னூட்டம் வழங்க வேண்டும்.
- குழந்தைகளின் படைப்புத் தொகுப்பு களைச் சேகரித்து வளரும் படைப்புத் தொகுப்பாக மாற்ற வேண்டும்.
- வகுப்பு தல PTA கூட்டங்களில் அவற்றைப் பகிர்ந்து பெற்றோர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.
- குழந்தையை முழுமையாக அறிதல் என்பதே இக்கல்வியாண்டின் நோக்கம் ஆகும்.

.

பட்டரை : 7

நோக்கம் : பள்ளிகளில் தற்போதைய SRG ன் தற்போதைய நிலை அதன் செயல்பாடுகள் போன்றவற்றைப் பகுத் தறித்து வரும் கல்வியாண்டில் அதன் செயல் வரிசையைத் துல்லியப் படுத்துவதில் ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்

செயல் வரிசை:

RP

- இன்று காலை முதல் மாணவர்களின் பல்வேறு வளர்ச்சி நிலைகளையும் அவற்றில் ஏற்பட்ட இடைவெளிகளையும் பற்றிக் கலந்துரையாடினோம் அல்லவா?
- இவற்றைச் சிறப்பாக நடை முறைப் படுத்த நமக்கு பள்ளி அளவிலே எந்தெந்த அமைப்புகளின் ஒத்துழைப்புகள் தேவைப்படும்?
- கலந்துரையாடுதல்
- ஒரு சிலருக்கு வாய்ப்பு
- RP ஒருங் இணைத்தல்.
- SRG, PTA, CPTA, SMC மாணவர்கள் அடங்கிய பல்வேறு மன்றங்கள்.
- இதில் பள்ளியின் கற்றல் செயல் வரிசையில் நேரடியாகப் பங்களிப்பு செய்யும் அமைப்பு எது?
- SRG அல்லவா?
- SRG களின் தற்போதைய நிலை யாது?
- அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம்?
- இன்று காலை முதல் மாணவனின் வளர்ச்சி மண்டல மேம்படுத்துதலுக்கான திட்டமிடல்களை SRG அடிப்படையிலேயே தயார் செய்தோம் அல்லவா? எனில்
- பள்ளியின் முழுமையான வளர்ச்சிக்கு SRG யின் முழுமையான பங்கு என்ன ?
- பங்காளிகளை நான்கு குழுக்களாக்குதல் குழுவில் இருந்து கலந்துரையாடி கருத்துகளை வரிசைப் படுத்த போதுமான நேரம் வழங்குதல்.

  ஒவ்வொரு குழுவும் வெளியிட வாய்ப்பளித்தல்
  RP ஒருங்கிணைத்து எழுதுதல்.

- ஒவ்வொரு வாரமும் சிறப்பான நேரம் எடுத்து SRG கள் கூட வேண்டும்.

- அரசு தரும் நிதி உதவி தொடர்பாக கலந்துரையாடல் நடத்தித் தீர்மானங்கள் எடுப்பது போலவே ஒவ்வொரு வகுப்பின் கற்றல் செயல் வரிசைகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடத்தித் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.
- ஒரு வருடத்திற்கான அகாடமிக் மாஸ்ட்டர் பிளான் தயார் செய்வதில் முக்கியப் பொறுப்பு வகிக்க வேண்டும்.
- வருட அகாடமிக் மாஸ்டர் பிளானில் இருந்து ஒவ்வொரு மாதத்திற்கான கற்றல் செயல்பாடுகளின் செயல் வரிசையைத் திட்டமிட வேண்டும்.
- ஒவ்வொரு வகுப்பின் திட்டமிடலை நடத்துவதற்கு வகுப்பு ஆசிரியருக்கு உதவும் குழுவாக SRG மாற வேண்டும்.
- திட்டமிட்டு நடத்திய செயல் வரிசைகள் அதே படி நடக்கிறதா? என மதிப்பீடு செய்து தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குழுவாக SRG மாற வேண்டும்.
- ஒவ்வொரு வகுப்பின் கற்றல் செயல் வரிசையை திட்டமிட வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளைத் தேர்ந்தெடுக்கலாம்.
- நேரத்தை மிச்சப் படுத்துவதற்காக google Meet வாட்ஸ் ஆப் போன்ற செயலிகளைப் பயன் படுத்தலாம்.
- மொத்தத்தில் பள்ளியின் ஒட்டு மொத்த கற்றல் செயல் வரிசையைத் திட்டமிடும் நடைமுறைப்படுத்தும் மதிப்பீடு செய்யும் பின்னூட்டம் நல்கும் குழுவாக SRG மாற வேண்டும் என்பதே இக் கல்வியாண்டின் நோக்க மாகும்

பட்டறை : 8

- . கலப்பு முறைக் கற்றல் (Blended Learnig)
- நோக்கங்கள் :
- ஆரம்பப் பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தவும் அறிவு உருவாக்கத்திற்குத் துணைபுரியவும் கலப்பு கற்றல் முறையின் வாய்ப்புகளை அறிந்து அவற்றை வகுப்பறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்.

- நேர்முக வகுப்புகளுக்குத் துணை புரியும் விதத்தில் இணையவழிக் கற்றலைக் சீர் செய்து மாணவர்களின் கற்றல் நேரத்தை சேமித்து கலப்பு முறைக் கற்றல் தொடர்பாக ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்.

- தொழில் நுட்பத்தைக் கையாளவும் இணைய வழிக் கற்றலின் துணையோடு நேர்முக வகுப்புகளில் மாணவர்களுக்கு உதவும் விதமாக ஆசிரியர்களைத் தயார் செய்தல்.
-
- மாறிய காலக்கட்டத்திற்கு ஏற்ப தொழில் நுட்பத்தைச் சரியான முறையில் கையாளுவதற்கு ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்
- .
- செயல் வரிசை
- அமர்வு 1
- நோக்கம் :
- ஆரம்பப் பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தவும் அறிவு உருவாக்கத்திற்குத் துணைபுரியவும் கலந்து கற்றல் முறையின் வாய்ப்புகளை அறிந்து அவற்றை வகுப்பறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்.

- நேர்முக வகுப்புகளுக்குத் துணை புரியும் விதத்தில் இணையவழிக் கற்றலைக் சீர் செய்து மாணவர்களின் கற்றல் நேரத்தை சேமித்து கலப்பு முறைக் கற்றல் தொடர்பாக ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்.

- உங்களுக்குப் பறவைகள் என்றால் பிடிக்கும் அல்லவா?
- மனிதனுக்கு மிக அருகாமையில் மனிதனோடு அண்டி வாழும் உங்களுக்குத் தெரிந்த பறவை எது?
- காகம்
- சிட்டுக்குருவி
- புறா
- மனிதனை மிகவும் அண்டி வாழும் மூன்று பறவைகள் சிட்டுக்குருவியும் காகமும் புறாவும்.
- இதில் எப்போதும் மனிதனோடு மிகவும் அண்டி வாழும் பறவை காகம் ஆகும்.
- காகத்தை உற்று நோக்கிய அனுபவம் உண்டா?
- ஒரு சிலர் காகம் பற்றி தாங்கள் உற்று நோக்கிய அனுபவத்தை பங்கிட வாய்ப்பளித்தல்.
- நான்காம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவனுக்கு ஒரு சந்தேகம்?
- காகத்தின் கால்களில் எத்தனை விரல்கள் ?
- அவனது சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டாமா?

- காகத்தின் கால் விரல்களின் எண்ணிக்கையை வாட்ஸ் ஆப் குழுவில் பதிவிட வாய்ப்பளித்தல்.

- இணையத்தில் தேடி சரியான பதிலைக் கண்டு பிடித்து வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப்பளித்தல்

- தொடர்ந்து
- காகம் தொடர்பான ஒரு பாடலை அறிமுகம் செய்தல்
- சேர்ந்து பாட வாய்ப்பளித்தல்.

காகம்

காகம் சிறந்த காகம்
கறுப்பு நிறத்துக் காகம்
வீதி எல்லாம் சுற்றியே
விருந்து உண்ணும் காகம்

அதிகாலை எழுந்திடும்
அங்குமிங்கும் பறந்திடும்
உணவைக் கண்ட போதினில்
ஒன்று கூடித் தின்றிடும்.

தாவித் தாவி நடந்திடும்
தலையைச் சரித்துப் பார்த்திடும்
கூர்மையான அலகினால்
கொத்தி உணவைத் தின்றிடும்.

ஊதியமும் இன்றியே
உலகைச் சுத்தம் செய்யுதே
காகம் மட்டும் இல்லையேல்
கடைத் தெருவும் நாறுமே

- இந்தப் பாடலில் காகத்தின் என்னென்ன சிறப்புகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன?
- ஒரு சிலருக்குத் தங்களது கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.

- காகம் எப்போதுமே நமது அருகாமையில் காணப்படுகிறதல்லவா..
- காத்தைப் போலல்லாமல் சில பறவைகள் விருந்து வந்து போவதும் உண்டு.
- அவை நிரந்தரமாக இங்கே தங்குவது இல்லை. சில நாட்கள் முதல் சில மாதம் வரை அவை இங்கே தங்கிச் செல்வது உண்டு.இதை நாம் வலசை வருதல் (வலசை போதல் - Migration) என்கிறோம்.

- பங்காளிகளுக்குத் தெரிந்த ஐந்து வலசை வரும் பறவைகளின் பெயர்களை வாட்ஸ் ஆப் குழுவில் பகிர வாய்ப்பளித்தல்.
- யார் யார்? எந்தெந்தப் பறவைகளின் பெயர்களை எழுதினர்?

- வலசை வருதல் தொடர்பாக நீங்கள் அறிந்தது என்னென்ன?
- ஒரு சிலருக்கு தங்களது கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.
- வலசை வருதல் தொடர்பாக கூடுதல் விபரங்களை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம் ?
-
- விக்கி பீடியா
- யூ-டியூப்
- இணையத்தின் மற்று வாய்ப்புகள்.
- நேர்காணல்
- சரி கீழ் காணும் Link வழியாக கடந்து செல்லலாமா?
- மூன்று Link களையும் ஒன்றாக வழங்காமல் ஒவ்வொன்றாக வழங்க வேண்டும்.
- முதல் Link ஐ வாசித்து முடிக்க போதுமான நேரம் வழங்கிய பின்னரே இரண்டாவது Link ஐ வழங்க வேண்டும்.
- இரண்டாவது Link ஐ முழுமையாக வாசித்த பின்னரே மூன்றாவது Link ஐ வழங்க வேண்டும்.

https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%B1%E0%AE%B5%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%9A%E0%AF%88

2,https://birdsshadow.blogspot.com/2016/11/6-migration-birds.html?m=1

3,

https://m.dinamalar.com/detail.php?id=2017829

- வலசை வருதல் தொடர்பாக சற்று தெளிவுகள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கும்.
  வலசை தொடர்பாக முழுமையான செய்திகள் நமக்குக் கிடைத்து விட்டதா?
  கூடுதல் தெளிவு பெற என்ன செய்யலாம்?
- பறவை ஆர்வலர் ஆர்வலரிடம் நேர்காணல் நடத்தலாம்.
- தற்போது...... சில வீடியோக்களைக் காணலாமா? என்று சொல்லி
- மேலும் சில தெளிவுகள் பெறுவதற்கு சில வீடியோக்களை வாட்ஸ் ஆப் குழுக்களில் பங்கு வைத்தல். .

  முதல் வீடியோவை முழுவதுமாக கண்டு விட்டனர் என்று உதுதிப் படுத்திய பின்னரே இரண்டாவது வீடியோவைப் பகிரவும்

- நெட் கவரேஜ் பிரச்சனைகள் இருப்பின் வீடியோவை வாட்ஸ் ஆப் குழுவில் பகிர்வதுடன் வகுப்பில் பொதுவாக புே ராஜக்டர் பயன்படுத்திக் காண்பிக்கவும் செய்யலாம் .
- இரண்டு வீடியோக்களையும் முழுமையாகக் காண வாய்ப்பளிக்க வேண்டும்.

https://youtu.be/qCbAppfvzeo

https://youtu.be/dGuJcsybViQ

- இப்போது வலசை வருதல் தொடர்பாக பல செய்திகளும் நமக்குக் கிடைத்திடுக்கும் அல்லவா?
- இனி வலசை வருதல் தொடர்பாக நீங்கள் அறிந்த கருத்துகளை வரிசைப்படுத்தி பறவைகள் வலசை வருதல் என்னும் தலைப்பில் ஒரு குறிப்பு தயார் செய்க.

- தேவையான படங்களை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.
- போதுமான நேரம் வழங்குதல்.
- படைப்புகளை வாட்ஸ் ஆப்பில் வெளியிட வாய்ப்பளித்தல்
- மற்று பங்காளிகள் வெளியிட்ட படைப்புகளை வாசித்து அது தொடர்பாக தமது கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.

- இந்த அமர்வின் வாயிலாக கடந்து வந்த செயல் வரிசைகள் எவை?
- ஒவ்வொருவரும் வெளியிட வாய்ப்பளித்தல்.
- மனிதனை அண்டி வாழும் பறவைகள் தொடர்பான சிறு கலந்துரையாடல்

- காகம் தொடர்பான ஒரு குழந்தையின் சந்தேகத்தை வெளியிட வாய்ப்பளித்தல்.
- அதற்கான விடையை முதலில் வெளியிடவும் பின் இணைய தளம் மூலமாகத் தேடிக் கண்டு பிடிக்கவும் வாய்ப்பளித்தல்.

- பாடல் வரிகளை பாட வாய்பளித்தல்
- காகத்தின் என்னென்ன சிறப்புகள் பாடலில் உள்ளன வெளியிட வாய்ப்பளித்தல்
- வலசை வருதல் என்ற கருத்தை வெளியிடல்.
- வலசை வருதல் தொடர்பாக ஒரு சிலர் அறிந்தத வெளியிட வாய்ப்பளித்தல்.
- கருத்துகளை சேகரிப்பதற்கான வாய்ப்புகள்.
- லிங்குகள் வீடியோ போன்றவற்றை வெளியிடுதல்
- அறிவு உருவாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு
- சேகரித்த கருத்துகளை வரிசைப்படுத்தி ஒரு குறிப்பு தாயார் செய்வதற்கான வாய்ப்பு.
- மற்றுள்ள படைப்புகளை வாசித்து அவர்கள் எழுதிய கருத்து மொழி நடை போன்றவற்றை அறிய வாய்ப்பு.
- சுய மதிப்பிடல்
- பரஸ்பர மதிப்பிடல்
- மேம்படுத்துவதற்கான வாய்ப்பு
- போன்றவை.
-
- இந்த செயல் வரிசைகளில் RP யின் பங்களிப்பு என்ன?
- சில கேள்விகள் கேட்கவும் செயல் வரிசை வழியே கடத்திச் செல்வதுமான முயற்சிகள் மட்டுமே நடந்துள்ளது.
- இது சாதாராண வகுப்பறையில் இருந்து என்னென்ன மாற்றங்கள் வந்துள்ளது.
- அறிவைப் ஆசிரியர் வழங்குவதற்குப் பதிலாக அறிவு உருவாக்கம் நடைபெறும் கட்டங்கள் வழியாக மாணவர்களைக் கடத்தி விடும் பணியை மட்டுமே இங்கு ஆசிரியர் செய்தார் அல்லவா?

- இத்தகைய முறையில் சிற் சில மாற்றங்கள் செய்து வகுப்பறையில் நடைமுறைப்படுத்தினால் மாணவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை?
- கலந்துரையாடல்

RP

- கலப்பு முறைக் கற்றல் வாயிலாத நேர்முக வகுப்புகளையும் இணைய வழி உதவிகளையும் மற்று வாய்ப்புகளையும் ஒருங்கிணைத்து வகுப்பறைச் செயல் வரிசை வாயிலாக வழங்குவது மாணவர்களின் அறிவு உருவாக்க செயல் வரிசைக்கு உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.
- திட்டமிடும் போது முன்கூட்டியே நேர்முக வாய்ப்புகளையும் இணையம் வழி வழங்கும் மற்று உதவிகளையும் முன்கூட்டியே திட்டமிட விட வேண்டும்.
- எந்த இடத்தில் எதை, எப்போது எப்டிப் பயன்படுத்தப் போகிறோம் என்பதில் ஆசிரியருக்கு ஒரு சிறப்பான கண்ணோட்டம் இருக்க வேண்டும்.
- மாணவனின் தரத்திற்கும் வகுப்பிற்கும் பாடச் சூழலுக்கும் ஏற்றதாக கொடுக்கும் Linkகுகள் வீடியோக்கள் மற்று வாய்ப்புகள் இருக்க வேண்டும்.
- இணைய வழிக் கற்றலின் போது ஆசிரியரின் உதவி இருக்க வேண்டும்.
- இணையம் வழி அறிவு உருவாக்கத்தில் உதவ பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உதவியை நாடலாம்.
- அது தொடர்பாக அவர்களுக்கும் சில பயிற்சிகள் வழங்கலாம்.
- வகுப்பறையில் இணையவழிக் கற்றல் வழியாக மாணவர்களைத் கடத்தி விடும் போது பள்ளியில் உள்ள லேப் டாப் புரோஜக்டர் போன்றவற்றைப் பயன் படுத்தலாம்.
- பள்ளியின் மற்று செயல்களுக்குப் பயன்படுத்துவது போலவே டேப்டாப் போன்றவற்றை கலப்பு முறைக் கற்றலுக்காகப் பயன்படுத்த வேண்டும்.
- வரும் வருடத்தில் கலப்பு முறைக் கற்றலுக்கு கூடுதல் வாய்ப்புகள் வழங்கி மாணவர்களின் அறிவு உருவாக்கச் செயல் பாடுகளுக்கு உதவவும் நேரத்தைச் சேமிக்கவும் செய்யலாம் .

ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொரு அலகிலும் அதற்கான வாய்ப்புகளைக் கண்டடைய வேண்டும்.

பட்டறை : 9

நோக்கம் :

- ஆரம்பப் பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தவும் அறிவு உருவாக்கத்திற்குத் துணைபுரியவும் கலந்து கற்றல் முறையின் வாய்ப்புகளை அறிந்து அவற்றை வகுப்பறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்

- நேர்முக வகுப்புகளுக்குத் துணை புரியும் விதத்தில்
- இணையவழிக் கற்றலைக் சீர் செய்து மாணவர்களின் கற்றல் நேரத்தை சேமித்து இரண்டறக் கலந்து கற்றல் தொடர்பாக ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்

'

- செயல் வரிசை:
- உங்களுக்குப் பழங்கள் என்றால் மிகவும் பிடிக்கும் அல்லவா?
- பழங்கள் தொடர்பான ஒரு பாடல் பாடலாமா?
- என்று கேட்டு கீழ் வரும் பாடலை அறிமுகம் செய்தல்

மாம்பழமாம் மாம்பழம்

மல்கோவா மாம்பழம்

சேலத்து மாம்பழம்

தித்திக்கும் மாம்பழம்

அழகான மாம்பழம்

அல்வா போன்ற மாம்பழம்

உங்களுக்கு வேண்டுமா?

இங்கு ஓடி வாருங்கள்

பங்கு போட்டுத் தின்னலாம்

- பாடலை யூ டியூப் ல் காணலாமா?

https://youtu.be/NhCsCM-ut5k

- <u>பாடல்</u> பிடித்ததல்லவா ?
- பாடலில் கூறப்பட்டுள்ளது போன்று நாம் பழங்களைப் பங்கு போட்டுத் தின்லைாமா? என்று சொல்லி பங்காளிகள் அனைவருக்கும் பல விதத்திலான பழங்களை வழங்குதல். (பழங்கள் தோல் நீக்கப்பட்டு துண்டுகளாக நறுக்கப்பட்டிருக்க வேண்டும்)
- கிடைத்த பழத்தின் சுவையின் அடிப்படையில் பழத்தின் பெயரைக் கண்டு பிடிக்க வாய்ப்பளித்தல்.
- எல்லாப் பழத்தின் சுவையும் ஒரே போன்று உள்ளதா?
- கருத்துக்களை வெளியிட வாய்ப்பளத்தல்.
- எல்லா இடங்களிலும் ஒரே போன்ற பழங்கள் தான் கிடைக்கறதா?
- அவற்றை எவ்வாறெல்லாம் வகைப் படுத்தலாம்?
- அவரவர் வட்டாரத்தில் கிடைக்கும் பழங்களின் பெயர்களை வாட்ஸ் ஆப்பில் எழுதி வெளியிட வாய்ப்பளித்தல்.
- குறிப்பிட்ட நேரம் வழங்குதல்.
- எல்லாப் பழங்களும் நமது வட்டாரத்தில் விளைகிறாதா?
- என்னென்ன பழங்களை இறக்குமதி செய்கிறோம்.
- ஒவ்வொருவரும் எழுதி வெளியிடுதல்.

RP

- வாட்ஸ் ஆப் குழு வழியாக பல்வேறு பழங்களின் படங்களை பகிர்தல்.
- படத்தில் எத்தனை வகைப் பழங்கள் உள்ளன?
- அவற்றை ஏற்கனவே எழுதியதில் உட்படுத்தி முழுமைப் படுத்த வாய்ப்பளித்தல்.
- எல்லாம் பழங்களும் ஒரே நிறத்திலும் வடிவத்திலும் அளவிலும் உள்ளதா?

- இவற்றுள் கூடுதல் வட்டாரப் பழங்களா? வெளியில் இருந்து இறக்குமதி செய்த பழங்களா?
- ஒரே பழத்தின் எத்தனை வகைகள் உள்ளன ?
- அவை ஒவ்வொன்றிற்கும் ஒரே விலையா?
- தமது கருத்துகளை வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப் பளித்தல்.

- பழங்களைப் பற்றி மேலும் அதிகமான கருத்துகளை அறிந்து கொள்ள என்னென்ன முறைகளைக் கையாளலாம்?
- வெளியிட வாய்ப்பளித்தல்
- பழங்களைப் பற்றி அதிகமாக அறிந்தவர்களிடம் விசாரிக்கலாம்?
- கடைகளில் நேரடியாகச் சென்று கருத்துகளைத் திரட்டலாம்.
- நூல்களை வாசித்து அதிலிருந்து கண்டு பிடிக்கலாம்.
- கூகில் மீட் மூலமாக நேர்காணல் நடத்தி . அறியலாம்
- போன் வழியாக அறியலாம்
- வீடியோ கால் மூலமாக அறியலாம்
- இணையத்தில் இருந்து கிடைக்கும் புள்ளி விபரங்கள் மூலமாக அறியலாம்
- அனைவரும் இணைந்து பங்கு பெறும் விதமாக
  இதில் தற்போது நாம் எந்த முறையைப் பயன் படுத்தலாம்?
  நாம் கடைக்கு நேரில் செல்லாமல் கடைக்காரரைப் பார்த்து விரங்களைத் திரட்ட இதில் எந்த முறை உதவும்?
  கூகில் மீட் மூலமாக அறிய வாய்ப்புள்ளது அல்லதா?
- கூகில் மீட்டிங் வழி கருத்துகளைத் திரட்டுவதாக இருந்தால் கடைக்காரரிடம் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள்?
  RP ஒருங்கிணைத்தல்.
- தற்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்கள் எவையெல்லாம் ?
- இதில் நமது வட்டாரத்தில் விளையும் பழங்கள் எவை?
- வெளியில் இருந்து இறக்குமதி செய்த பழங்கள் எவை?
- அதிகமாகக் கிடைப்பவை வட்டாரப் பழங்களா? இறக்குமதி செய்யும் பழங்களா?
- ஒவ்வொரு பழத்தின் விலை எவ்வளவு?
- ஒரே பழத்தில் வேறுபட்ட இனங்கள் உண்டா?
- ஒவ்வொரு இனத்தின் விலையிலும் வேறுபாடு உண்டா?

- இந்த விபரங்களை எவ்வாறு வரிசைப் படுத்தலாம்.? அலசி ஆய்வதற்கு வாக்கியங்களில் எழுதுவது சிறந்ததா? அட்டவணை சிறந்ததா?
- தனிப்பட்ட முறையில் அட்டவணை தயார் செய்வதாக இருந்தால் அதில் என்னென்ன உட்படுத்துவீர்கள்?
- பங்காளிகளின் உதவியோடு அட்டவணை வடிவமைத்து வழங்குதல். அட்டவணை 1

பழங்களும் விலையும் ..

வட்டாரத்தில் விளையும் பழங்கள்	விலை (கிலோ ஒன்றிற்கு)	இறக்குமதி செய்யும் பழங்கள்	விலை (கிலோ ஒன்றிற்ககு)

அட்டவணை 2

. ஒரே பழத்தின் வெவ்வேறு இனங்களின் விலை

பழ வகை ...	இனம் ... 1.	இனம் ....2.	இனம் ....
திராட்சை			
ஆப்பிள்			
வாழை			
மாம்பழம்			
ஆரஞ்சு			

.

- ஒன்றிற்கும் மேற்பட்ட பழ வியாபாரிகளுடன் கூகில் மீட் வழியாக கலந்துரையாடல் நடை பெறுகிறது.
  கடையில் உள்ள பழங்கள் கலந்துரையாடல் மூலமாக நேரடியாகக் காண்பிக்கப்படுகிறது.
  நேர்முக வருணனை, பழங்களைக் கையில் எடுத்துக் காண்பித்தல் அவற்றின் விலை அவை தனித்தன்மை போன்றவற்றை கடையில் நின்று கூகில் மீட்டில் பங்கெடுப்பவர் விளக்குதல்

- ஒவ்வொரு இடத்திலும் உள்ள பழங்கள் அவற்றின் விலைகள் போன்றவை திரட்டப் படுகின்றன.
- (கடைகள் முன்கூட்டித் தீர்மானிக்க வேண்டும்)
- முன்பாகவே தயார் செய்த கேள்விகளின் அடிப்படையில் அட்டவணையை நிரப்ப வாய்ப்பளித்தல்.
- பங்காளிகளை 3 குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவும் ஒரு கடை என்ற முறையில் 3 அட்டவனைகள் தயாரிக்க வாய்ப் பறித்தல்
- தயார் செய்த அட்டவணைகளை குழுக்களில் பங்கிட வாய்ப் பளித்தல்.
- இந்த மூன்று கடைகளில் இருந்தும் கிடைத்த விபரங்களின் அடிப் படையில் பழங்களின்   வகை மற்றும் அவற்றின் விலை தொடர்பாக என்னென்ன முடிவிற்கு வரலாம்?
- புள்ளி விபரங்களின் அடிப்படையில் அவரவர் எட்டிய முடிவுகளை
- வரிசைப் படுத்தி வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப் பளித்தல்..
- வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட்ட மற்று முடிவுகளை வாசித்துத் தன் முடிவுகளோடு ஒப்பிட வாய்ப்பளித்தல்
- மீண்டும் தேவையெனில் முடிவுகளை மறு பரிசீலனை செய்யத் தூண்டுதல் .

- முடிவுகள் .

- பழக்கடைகளில் பல்வேறுs வகையான பழங்கள் விற்பனைக்காக வைக்கப் படுகின்றன.
- அவற்றுள் வட்டாரத்தில் விளையும் பழங்களும் இறக்குமதி செய்யும் பழங்களும் உண்டு.
- வட்டாரத்தில் விளையும் பழங்களை விட இறக்குமதி செய்யும் பழங்களே அதிகம். ஒரே பழத்தின் விலை வெவ்வேறு கடைகளில் வேறுபடுகிறது.
- ஒரே பழத்தின் வெவ்வேறு இனங்களும் உள்ளன.
- ஒவ்வொரு இனத்தின் விலை ஒவ்வொரு கடையிலும் வேறுபடுகிறது.

- வகுப்பறையில் இது போன்ற செயல்பாடுகளுக்கான வாய்ப்புகள் உள்ளதா?
- எந்தெந்த சூழலில் இதைப் பயன்படுத்தலாம்.

- வகுப்பறையில் இது போன்ற ஏராளமான வாய்ப்களை உருவாக்கலாம்.

- விமான நிலையங்கள், இரயில் நிலையம், உயிரியல் பூங்கா, கடல், வயல், விளை நிலங்கள், இயற்கைக் காட்சிகள், மலினமாதல் போன்றலற்றை நேரடியாகக் காட்ட இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம்..

- இச் செயல் பாட்டின் வாயிலாக மாணவர்கள் பெற்ற திறன்கள் எவை?
- பழங்களைப் பற்றிய முன்னறிவை வெளியிடுதல்.
- வட்டாரப் பழங்கள் மற்றும் இறக்குமதி செய்யும் பழங்கள் தொடர்பான செய்திகளைத் திரட்டுதல்
- திரட்டிய செய்தி களின் அடிப்படையில் அட்டவணையை நிறைவு செய்தல்.
- ஒவ்வொருவரும் அவரவர் முடிவை வெளியிடுதல்
- அட்டவணையை அலசி ஆராய்ந்து சில முடிவிற்கு வரல்.
- தமது முடிவுகளை வெளியிடல்..
- மற்றவர் முடிவுகளோடு தமது முடிவுகளைப் இணைத்துப் பார்த்தல்.
- பொது முடிவிற்கு வரல்
- மேற்குறிப்பிட்ட செயல் வரிசை அனைத்துமே அறிவு உருவாக்கக் செயல் வரிசையின் கட்டங்கள் ஆகும்.

- எனவே வகுப்பறையில் அறிவு உருவாக்கம் நடை பெதுவதற்கு இது போன்ற தொழில் நுட்ப வாய்ப்புகளைப் பயன் படுத்தலாம்

- இது போன்ற செயல்பாட்டை வெற்றி பெறச் செய்ய செயல் வரிசையில் கவனிக்க வேண்டிய முன்னேற்பாடுகள் எவை?
- கலந்துரையாடல்

- RP ஒருங்கிணைத்தல்.

- முன்கூட்டியே சிறப்பான முறையில் திட்டமிடுவது அவசியமான ஒன்றாகும்.

- எந்த இடத்தில் எப்போது எவ்வாறு பயன் படுத்தப் போகிறோம் என்பதை கற்பித்தல் செயல் வரிசையில் துல்லியமாக குறிப்பிட வேண்டும்.

- வாய்ப்புகளை முன்கூட்டி ஒத்திகை பார்க்க வேண்டும.

- ஆசிரியர் என்ன செய்ய வேண்டும் மாணவர் என்ன செய்ய வேண்டும் கூகில் மீட் வழியாகப் பங்கெடுப்பவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவு இருக்க வேண்டும்.

- விமான நிலையம் போன்றலற்றை இத்தகைய செயல் வரிசையில் பயன்படுத்தும் முன் அனுமதி பெற வேண்டும்
- தொழில் நுட்பங்களை வகுப் பறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகப் பயன்படுத்தக் கூடாது. தேவைக்கு ஏற்ப மட்டும் பயன்படுத்த வேண்டும்

ஒருங்கிணைத்தல்.

- நேர்முக வகுப்புகளோடு நவீன தொழில் நுட்பத்தின் வாய்ப்புகளையும் கலந்து பயன்படுத்துவது குழந்தைகளின் அறிவு உருவாக்கத்திற்குத் துணை புரிய இயலும் என்பதற்கான கலந்து கற்றல் முறையின் ஒரு வாய்ப்பினை நாம் இங்கே ஒத்திகை பார்த்தோம் இது போன்றவாய்ப்புகளைக் கண்டடைந்து வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்.

அமர்வு : 10,

- ஆசிரியர்களும் தொழில் நுட்ப வாய்ப்புகளைப் பயன்படுத்துதலும்

- நோக்கம் :

- தொழில் நுட்பத்தைக் கையாளவும் இணைய வழிக் கற்றலின் துணையோடு நேர்முக வகுப்புகளில் மாணவர்களுக்கு உதவும் விதமாக ஆசிரியர்களைத் தயார் செய்தல்.

- மாறிய காலக்கட்டத்திற்கு ஏற்ப தொழில் நுட்பத்தைச் சரியான முறையில் கையாளுவதற்கு ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்

- கொரானாவிற்குப் பிந்தைய காலக் கட்டத்தில் நவீன தொழில் நுட்பங்களை வகுப்பறையில் பயன் படுத்துவதில் ஆசிரியர் களைத் தெளிவு பெறச் செய்து மேலும் வகுப் பறையில் பயன்படுத்த செயலிகளின் பயன்பாட்டை அறிய வாய்ப்பளித்தல்.

செயல் வரிசை

- வாட்ஸ் ஆப் குழுவில் பகிர்ந்த பாடலை அனைவரும் காண வாய்ப்பளித்தல்.

https://youtu.be/hVajuTFFqKA

- விருப்பம் உள்ளவர்கள் பாட வாய்ப்பளித்தல்.
- பாடலில் வரும் உணவுப் பொருள் எது?
- உலகில் உள்ள மனித இனம் பன்முகத் தன்மை வாய்ந்த உணவு வகைகளைப் பயன் படுத்துகிறது. நம்மில்

ஒவ்வொருவரும் அவரவருக்கு விருப்பமான உணவு வகைகளைப் பயன்படுத்துகிறோம். .
இந்தப் பயிற்சியில் பங்கெடுக்கும் அனை வரும் ஒரே போன்ற உணவுப் பழக்கம் உடையவரா?
கலந்துரையாடல்
உங்களுக்கும் பிடித்த பானம் எது? ஒரு சிலர் வெளியிட வாய்ப்பளித்தல், ?
ஒவ்வொருவருக்கும் இது வேறுபடுகிறது அல்லவா.
நமது உணவுப் பழக்கம் தொடர்பான பல்வேறு விபரங்களைத் திரட்டி ஒருங்கிணைக்க என்ன செய்யலாம் ?

- வினா நிரல் வழங்கி விபரங்களைத் திரட்டி வெளியிடலாம் அல்லவர்.
- இதை எளிமையாகச் செய்ய ஏதாவது தொழில் நுட்பம் உள்ளதா?
- கலந்துரையாடல்.
- Google form ஒரு சிறந்த தொழில் நுட்பம் ஆகும்.
- நமக்கு அதைப் பயன் படுத்திப் பார்க்கலாம்

- உணவுப் பழக்கம் தொடர்பான google form ஐ வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிடல். அவரவரது உணவுப் பழக்கம் தொடர்பான வினாக்களுக்கு விடை அளிக்க வாய்ப்பளித்தல்.

https://forms.gle/DnEPo65AZomdjDYA9

- குறிப்பிட்ட நேரம் வழங்குதல்
- உணவுப் பழக்கம் தொடர்பான முடிவுகளை வாட்ஸ் ஆப் குழுவில் பகிர்தல்.
- உணவுப் பழக்கம் தொடர்பாக கண்டடைந்த விபரங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பயிற்சியில் பங்கெடுக்கும் நபர்களின் உணவுப் பழக்கம் தொடர்பாக என்னென்ன முடிவுகளை நாம் அடைந்தோம்?
- கலந்துரையாடுதல்
இத்தனை ஆட்களிடம் இது போன்று வினா நிரல் கொடுத்து அவற்றை எழுதி வாங்கி முடிவுகளை ஒருங்கிணைத்து வெளியிட அதிகமான நேரம் தேவைப் படும் அல்லவா? நாம் தொழில் நுட்பத்தின் உதவியுடன் விரைவாகவும் துல்லியமாகவும் முடிவுகளை வெளியிட்டோம்
- Google form ஐப் பயன் படுத்தி வேறு என்னென்ன செய்யலாம்?

- புள்ளி விபரங்களைத் திரட்டும் அனைத்துச் செயல்பாடுகளும் இதன் வழி செய்ய இயலும்.
- தொழில்கள் வாகனங்களின் பயன்பாடு வளர்ப்பு விலங்குகள் போன்று பல வாய்ப்புகளும் உண்டு.
- மேலும் கூகில் பார்ம் பயன் படுத்தித் தேர்வுகள் அலகு மதிப்பீடு, வினா விடைப் போட்டிகள் போன்றவற்றையும் நடத்தலாம் அல்லவர்.
- அவ்வாறு பயன்படுத்தியவர்களின் அனுபவம் பங்கு வைக்க வாய்பளித்தல்.

- உங்களில் எத்தனை பேருக்கு Google form உருவாக்கத் தெரியும்?

கீழ்கண்ட வீடியோவைப் பாருங்கள்.

வாஸ்ட் ஆப் குழுவில் உள்ள கூகில் பார்ம் தொடர்பான வீடியோவைக் காண வாய்ப் .

- https://youtu.be/_DcoaaqwB5I

  https://youtu.be/HFAIOEnUUS4

- வீடியோக்களைக் காணப் போதுமான நேரம் வழங்குதல் வீடியோவின் உதவியுடனும் மேலும் RP யின் உதவியுடனும் google form தயாரித்துக் வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப் பளித்தல்.
- தேவையான பின்னூட்டம் வழங்குதல்
- Google form பயன்படுத்துபவர்களின் அனுபவத்தைப் பங்கு வைக்க வாய்பளித்தல்
- மாறிய காலக் கட்டத்திற்கு ஏற்ப ஓர் ஆசிர்யர் அறிந்திருக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் எவையெல்லாம் ?
- கலந்துரையாடுதல்.

  தொழில் நுட்பத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

  1. எடுத்துப் பயன்படுத்துபவை.
  2. சுயமாகத் தயாரிப்பவை

     - எடுத்துப் பயன்படுத்துபவை.

     யு.பியூப்

     முகநூல்

வலைப்பூ
வலைத்தளம்
இணையம்
கூகில்
விக்கிப் பீடியா
லென்ஸ்

2, சுயமாகத் தயாரிப்பவை

- பயிற்சித் தாள்கள் தயாரிக்க, அறிக்கை தயாரிக்க, வாசிப்பு அட்டைகள் ,கதைகள், பாடல்கள் ,சொல் அட்டைகள் போன்றவை தயாரிக்கும் செயலிகள்.
- கார்டுண் தயாரிக்கும் செயலிகள்
- வீடியோ எடிட் செய்யும் செயலிகள்.
- மேற்கண்டவற்றில் இருந்து தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களைக் குழுவாக்குதல்
  குழுவில் மென் பொருள்களையும் செயலிகளையும் அறிமுகம் செய்தல்.

- போதுமான நேரம் எடுத்துத் கொண்டு அவரவருக்கு விருப்பமான செயல்கள் அவற்றின் பயன்பாடு போன்றவை பற்றி யு டியூப் மூலமாகவும் மற்று கலந்து கற்றல் வாய்ப்புகள் மூலமாகவும் செயலிகள் பயன்படுத்தி படைப்புகள் உருவாக்க வாய்ப் பளித்தல்.

- RP யின் ஒருங் கிணைப்பு
- நவீன காலக்கட்டத்திற்கு ஏற்ப புதிய தொழில் நுட்பங்களைக் கையாளுவதில் ஒவ்வொரு ஆசிரியரும் திறன் பெற வேண்டும்
- புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தி மாணவர்களை அறிவு உருவாக்கத்திற்கு அழைத்துச் செல்ல ஆசிரியரும் பல செயலிகளையும் தொழில் நுட்பத்தையும் பயன் படுத்தி படைப்புகளை தயார் செய்பவராக தன்னையும் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

- மாறும் காலகட்டத்திற்கு ஏற்ப தன்யையும் வளர்த்துக் கொள்ள தகவல் தொழில் நுட்ப மற்றும் தொழில் நுட்ப வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்
- கலந்து கற்றல் முறையைப் பயன் படுத்தி வகுப்பறைச் செயல்பாடுகளைச் சிறப்பாகச் செய்யும் ஆசிரியராக நாம் அனைவரும் மாறுவோமாக.

பட்டறை : 11

நோக்கம் :

1. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

- செயல் வரிசை

- RP ஒரு நிகழ்வை வெளியிடுதல்..

- ஒரு பள்ளியில் நடந்த விழாவில் பங்கெடுக்க ஒரு மாணவன் அழைக்கப் பட்டிருந்தான்.அந்த மாணவன் அவ்விழாவில் வெளியிட்ட அனுபவத்தைக் கவனியுங்கள். Wats app குழுவில் பகிர்தல்

நான் ஒன்றாம் வகுப்பில் படிக்கும் போதே மிகவும் சிரமத்தை அனுபவித்தேன்.எனக்கு பிரவியிலேயே இரண்டு கைகளும் கிடையாது. காலிருந்தும் நிற்கவோ ஓடவே முடியாது. காரணம் கைகள் இல்லாததன் காரணம் பாலன்ஸ் செய்ய முடியாததே இதற்குக் காரணமாகும். எழுந்து நிற்கவோ ஓடவோ முடியாது எழுந்து நின்றவுடனேயே பாலன்ஸ் இல்லாததால் விழுந்து

விடுவேன். நான் விழுந்தவுடன் வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் சிரிப்பார்கள். எனக்கு அவமானத்தால் அழுகை வரும். இதனால் விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் நான் எழுந்து ஓட முயற்சிப்பது இல்லை. நான் மற்று மாணவர்கள் யாடுவதை வேடிக்கை பார்த்துத் கொண்டிருப்பேன். ஒரு நாள் மற்று மாணவர்க விளையாடிக் கொண்டு இருக்கும் போது அங்கு உஷா டீச்சர் வந்தார். பிரணவ் நீ ஏன் விளை யாட வில்லை என்று கேட்டார். நான் என் நிலைமையைக் கூறினேன்உ அன்று முதல் உஷா டீச்சர் என்னைச் சிறப்பாகக் கவனித்துக் கொண்டார். நடக்கவும் பின் ஓடவும் பயிற்சிகள் தந்தார். தடுக்கி விழுந்த போதெல்லாம் என்னைத் தூக்கி நிறுத்த ஆறுதல் தருவார். ஆரம்பத்தில் எனக்கு. நிற்கவும் நடக்கவும் ஓடவும் கஷ்டமாக இருந்தது. ஆனால் காலம் செல்லச் . செல்ல நானும் நிற்கவும், நடக்கவும் ஓடவும் பழகிக் கொண்டேன். கைகளால் ஹேண்ட் பாரைப் பிடிக்காமலேயே சைக்கிள் ஓட்டவும் பழகிக் கொண்டேன். ஓவியம் வரைதல், பாட்டுப் பாடுதல் விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்தல் என அனைத்துத் திறன்களிலும் நான் சிறுகச் சிறுக முன்னேற்றம் கிடைத்தது. பல போட்டிகளிலும் பங்கு பெற்று நான் முதல் பரிசைப் பெற்றிருக்கிறேன். வீடு இல்லாத எனக்கு வீடு கட்டித் தரவும் பலரும் உதவி செய்துள்ளனர். தற்போது கேரள முதலமைச்சரின் பாராட்டைப பெற்று புகழின் உச்சியில் நிற்கிறேன்

எனது இந்த வளர்ச்சிகளுக்கெல்லாம் முன் நின்று செயல்பட்டவர் எனது உஷா டீச்சர் ஆவார். தொடக்கத்தில் அவர் எனக்கு நல்கிய ஊக்கமே எனது வளர்ச்சிகளுக்கு எல்லாம் அடிப்படை எனலாம். என் வாழ்நாளில் நான் அவரை மறக்கவே மாட்டேன்.

பிரணவின் வாழ்வில் வந்த மாற்றத்தைக் கவனித்தீர்களா

பிரணவ் பாடிக் கொண்டே ஓவியம் வரையும் ஒரு வீடியோவைக் காண வாய்ப்பளித்தல். (வாட்ஸ் ஆப், புரோஜக்டர்)

https://youtu.be/Z90oKj1juLo

- பிரணவின் இந்த வெற்றிக்குக் காரணமாக பிரணவ் யாரைக் குறிப்பிட்டார்.?
- உஷா டீச்சர் கொடுத்த அரவணைப்பும் ஊக்கமும் பிரணவை எவ்வளவு உயர்த்திற்கு எடுத்துச் சென்றுள்ளது.
- உங்களது வகுப்பில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உதவிய அனுபவம் உண்டா?

- உங்களது உதவியால் அந்த குழந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
- போன்ற அனுபவங்களைப் பங்கிட ஆசிரியர்களுக்கு வாய்ப் பளித்தல்.
- சிறப்பான அனுபவங்களை வெளியிட்ட ஆசிரியர் களைப் பாராட்டுதல்.
- ஒரு ஆசிரியரால் மட்டும் ஒரு மாற்றுத் திரனாளியின் வாழ்வில் மாற்றங்கள் செய்ய முடியுமா.?
- கலந்துரையாடல்
- ஒரு மாற்றுத் திறனாளியில் வாழ்வில் முன்னேற்றம் அடைய அவனது குடும்பம், வகுப்பாசிரியர், ,பள்ளி, சமூகம் ஆகிய ஒவ்வொரு அமைப்பிற்கும் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.
- பங்காளிகளை நான்கு குழுக்களாக்குதல்
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைப்பு வழங்குதல்

1. மாற்றுத் திறனாளிகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் பெற்றோர் மற்றும் குடும்பத்தின் பங்கு .
2. மாற்றுத் திறனாளிகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் வகுப்பு ஆசிரியரின் பங்கு,
3. மாற்றுத் திறனாளிகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் பள்ளியின் பங்கு
4. மாற்றுத் திறனாளிகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் சமூகத்தின் பங்கு .

ஒவ்வொரு குழுவும் குழுவில் இருந்து விவாதித்து கருத்து களைக் கண்டடைந்து வெளியிட வாய்ப் பளித்தல்.
போதுமான நேரம் வழங்குதல்..

RP ஒருங்கிணைப்பு

- குடும்பம்.

- தங்களது குழந்தைக்கு இத்தகைய குறிப்பிட்ட பிரச்சனை உள்ளது என்பதை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டடைய வேண்டும்.
- குழந்தையின் நடவடிக்கைகளை வைத்து அதன் கேள்வித் திறன் பார்வைத் திறன் உட்பட பல் வேறு திறன்களை

மிகவும் குறைந்த வயதிலேயே கண்டடைந்து அதற்கான தீர்வு முறைகளுக்கான முயற்சியில் இறங்க வேண்டும்

- சமூகம் என்ன நினைக்குமோ என்ற எண்ணத்தில் குழந்தை களின் குறைபாடுகளை மறைத்து வைப்பது தவறு. அது குழந்தையின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.
- இத்தகைய குழந்தைகள் பிறக்கும் தருணத்தில் தன்னம்பிக்கையை இழக்காமல் குழந்தைக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.
- குழந்தைக்கு பிரச்சனை இருப்பதை ஆசிரியர்கள் கண்டு பிடித்துச் சுட்டிக் காட்டினால் அதை ஏற்று தொடர் நடவடிக்கைகளுக்குத் தயார் ஆக வேண்டும்.
- குழந்தையின் நிலை தொடர்பாக பஞ்சாயத்து உட்பட மற்று உதவி நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் உரிமைகளையும் உதவிகளையும் பெறத் தயாராக வேண்டும்.
- குழந்தையின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுத்தக்கூடிய பயிற்சிகளையும் முயற்சி களையும் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்
- .
- .
- .
- .
-

- 2. வகுப்பு ஆசிரியர்.

- குழந்தையின் பிரச்சனையை மிகவும் குறுகிய வயதிலேயே அடையாளம் காண முயற்சிக்க வேண்டும்.

- குழந்தையின் பிரச்சனையை அடையாளம் கண்ட உடனே பெற்றோரிடம் இது தொடர்பாகக் கலந்துரை யாடல் நடத்த வேண்டும். கலந்துரையாடல் நடத்தும் போது மிகவும் கவனமாக நடந்து கொள்வது நல்லது. கழந்தையின் பிரச்சனை அதற்குத் தீர்வு காண்பதற்கான வழி முறைகள். தொடர்ச்சியாக கவனிக்க வேண்டியவை, மற்று

வழிமுறைகள் போன்றவற்றை பெற்றோரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்

- பெற்றோர்களின் தன்னம்பிக்கை வளரும் விதமான அறிவுரைகள் வழங்க வேண்டும்.

- குழந்தையின் பிரச்சனை அதன் ஆழம் பெற்றோர்களின் கண்ணோட்டம் அவர்களுக்கு வழங்கிய பின்னூட்டம் ஆகியவற்றை SRG யில் வெளியிடுதல்

- குழந்தையின் ஒவ்வொரு கட்டத்திலும் பெற்றோர் பள்ளி சமூகம் ஆகிய அமைப்புகளுக்கு இடையே ஒரு பாலமாக அமைந்து மாணவனின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்.

- அவசியமான சூழலில் பெற்றோரை உள இயல் அடிப்படையில் அனுகி கௌன்சிலிங் உட்பட மேல் நடபடிக்கைகளை வடிவமைக்க வேண்டும்..

- .

- .

- .

- .

- .

3,பள்ளி

- பள்ளியை மாற்றுத் திறனாளிகளுக்கு இணக்கமான பள்ளியாக மாற்ற முனைய வேண்டும்.
- இணைக்கப்பட்ட கழிவறைகள் மாற்றுத் திறனாளிகள் விளையாடுவதற்காக வடிவமைக்கப்பட்ட விளையாட்டு. இடம்,பூங்கா, Ramp and rail, உட்பட என்னென்ன தேவையோ அதை முழுதும் உள்ளடக்கியதா வகுப்பறை களையும் பள்ளி வளாகத்தையும் மாற்ற வேண்டும்.
- வகுப்பு ஆசிரியர்களின் கண்டடைவுகளை பெற்றோரிடம் எடுத்துச் செல்லவும் பெற்றோர் சமூகம் ஆகியவற்றிற்கு.

இடையே ஒரு பாலமாக அமைந்து குழந்தைகளின் நலனுக்காக அக்கரையுடன் பாடுபட வேண்டும்.

- குழந்தையின் குடும்ப சூழலுக்கு ஏற்ப அதன் பாதுகாப்பான வாழ்விற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கித் தருவதற்கான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். .
- BRC, பஞ்சாயத்து, போன்று மற்று அமைப்புகளில் இருந்து கிடைக்கும் உதவிகளைப் பெறுவதற்குப் பெற்றோருக்கு உதவ வேண்டும்.
- தேவை எனில் பெற்றோக்கு உளவியல் சார்ந்த வகுப்புகள் ஏற்பாடு செய்து அவர்களின் பயத்தை போக்க வேண்டும்.
- பாதுகாப்பாக பள்ளிக்கு வருவதற்கும் பள்ளியில் இருந்து வீட்டிற்குத் திரும்பு , வசதிகள் வழங்க வேண்டும்.
- .
- .
- .
- .

4, சமூகம்

- ஒவ்வொரு குழந்தையும் சமூகத்தின் சொத்து என்ற அடிப்படையில் மற்று குழந்தைகள் போலவே அனைத்து உரிமைகளையும் மாற்றுத் திறனாளிகளான குழந்தைகளும் பெற சமூகம் வழிமுறை செய்ய வேண்டும்.
- பெற்றோர் பள்ளி ஆகியோரை ஒருங்கிணைத்து மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை நடைமுறைப் படுத்த வேண்டும்.
- மற்றுள்ளவர்களின் உதவியுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் செய்ய வேண்டும்.
- மாற்றுத் திறனாளி களுக்கான உதவிகள் குறிப்பிட்ட அரசு அமைப்புகள் வாயிலாக குறிப்பிட்ட நேரத்தில் காலதாமதம் இன்றிக் கிடைக்கிறது என உறுதிப் படுத்த வேண்டும்.
- இத்தகைய குழந்தைகளையோ அவர்களின் குடும்பத்தையோ தனிமைப் படுத்தாமல் அரவணைத்து பாதுகாப்பான வாழ்க்கைக்கு உதவ வேண்டும்.
- .
- .

மாற்றுத்திறனாளிகளின் வெற்றிக்காக குடும்பம் பள்ளி சமூகம் ஆகிய அனைத்து அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

பட்டறை : 12

நோக்கம் :

2. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

- செயல் வரிசை :

RP

- எத்தனை வகையான மாற்றுத் திறனாளி கள் நம் பள்ளிக்கு வருகின்றனர்.?
- ஒவ்வொருவரும் குறிப்பிட்ட எண்ணிக்கையை வாட்ஸ் ஆப்பில் வெளியிட வாய்ப் பளித்தல்
- 5 முதல் 15 வரையிலான எண்ணிக்கையை எழுத வாய்ப்புண்டு.
- அதை விட அதிகமான வகை மாற்றுத் திறனாளிகள் நமது வகுப்பில் உள்ளனர்.
- அவர்கள் தொடர்பான சிறு விளக்கம் நமது வாட்ஸ் ஆப் குழுவிற்கு அனுப்பப் பட்டுள்ளது
- அதை வாசித்துப் பாருங்கள்

- என்று சொல்லி வாசிக்க வாய்ப் பளித்தல்.
- என்னென்ன வகைகளை அறிந்தீர்கள்
- வாசித்ததை வெளியிட வாய்ப்ப யத்தல்
- இதில் நமது வகுப்பறையில் நேரடியாக நாம் எதிர் கொள்ளும் பிரிவுகள் எவை?
- கலந்துரையாடுதல்.
- இத்தகைய மாணவர்கள் நமது வகுப்புல் இருந்தால் அவர்களையும் உட்படுத்தி கற்றல் செயல் வரிசையை வடிவமைப்பது எப்படி?
- ஓரிருவருக்குக் கருத்துகளைக் கூற வாய்ப்பளித்தல்.
- தொடர்ந்து
- RP ஆசிரியர்களை நான்கு குழுக்களாக மாற்றுதல்
- ஒவ்வொரு குழுவிற்கும் சார்ட்,மார்க்கர், ஸ்கெச் பேனா வண்ணம் தீட்ட உதவும் மெழுகு போன்ற வற்றை வழங்குதல்.
- சார்ட்டில் RP முன்கூட்டியே ஒரு மரத்தின் படம் வைத்திருக்க வேண்டும்.
- இது ஒரு வளரும் படம்
- இந்த மரத்தோடு தொடர்பு படுத்தி வளரும் படம் வரைய வாய்ப்பளித்தல்.
- பறவைகள், விலங்குகள், குழந்தைகள் என எது வேண்டுமானாலும் வரையலாம்.
- ஆனால் படம் முழுமை பெற வேண்டும்
- குழுவில் உள்ள அனைவரும் அவரவர் பங்களிப்பை உறுதிப் படுத்த வேண்டும்.
- படம் முழுமை அடைய போதுமான நேரம் வழங்குதல்.
- படம் வரைதல் முழுமை அடைந்த பின் ஒவ்வெகு குழுவும் அப்படத்தின் அடிப்படையில் ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வெளியிட வாய்ப் பளித்தல் கதை, பாடல், செய்கைப் பாடல், உரையாடல், கதைப் பாடல் போன்ற ஏதாவது ஒரு மொழி வெளியிட்டு வடிவத்தில் வெளியிட வேண்டும். ஒன்று முதல் நான்கு வரை ஒவ்வொரு குழுவும் குறிப்பிட்ட ஒரு வகுப்பிற்கான செயல் வரிசையைத் திட்டமிட்டால் போதுமானது. குழுவில் உள்ள அனைவரின் பங்களிப்பையும் உறுதிப் படுத்த வேண்டும்.
- RP

- மேற்கூறிய அட்டவணையில் உள்ள 21 மாற்றுத் திரனாளிகளில் இருந்து ஏதாவது பிரிவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி உங்களது வகுப்பில் இருப்பதாக வைத்துக் கொண்டால் அவரையும் கூடி உட்படுத்தி இந்தச் செயல்பாட்டை எவ்வாறு செய்வீர்கள்?
- ஒவ்வொரு குழுவும் மேற்கூறிய படத்தின் அடிப்படையில் திட்டமிடல் நடத்தி மாற்றுத் திறனாளி களை உட்படுத்தி மொழி வெளியீட்டுச் செயல் வரிசையை வெளியிடச் செய்தல்.

- ஒவ்வொரு குழுவும் வெளியிட்ட பின் எந்த அளவிற்கு அது மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியாக இருந்தது ? மேலும் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம் என்ற கண்ணோட்டத்தில் கலந்துரையாடுதல்
- தேவையான மாற்றங்களுக்கான பரிந்துரைகள் செய்ய வாய்ப்புகள் வழங்குதல்

RP ஒருங்கிணைப்பு

- நம்மிடையே 21 வகையான மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். ஒரே வகுப்பில் இத்தனை வகை மாற்றுத் திறனாளிகளையும் கையாள வேண்டிய சூழல் ஒரு போதும் ஏற்படுவது இல்லை.
- ஒரே வகுப்பில் ஒன்றிற்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளைக் கையாளும் சூழல் வரலாம்.
- பாடப் பகுதியைத் திட்டமிடத் தொடங்கும் போதே நமது வகுப்பில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் பங்கெடுக்க இயலும் வண்ணம் செயல் வரிசையில் தேவையான வாய்ப்பு களை உட்படுத்த வேண்டும்..
- கற்றல் செயல் வரிசையில் அத்தகைய மாணாக்கரின் பங்களிப்பையும் உறுதிப் படுத்த வேண்டும்.
- கலந்து கற்றல் முறையின் வாய்ப்புகளையும் இங்கே பயன்படுத்தலாம்.

.

பட்டறை :13

நோக்கம் :

3. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

- செயல் வரிசை :

RP

- பாடலுக்கு மெட்டமைத்துப் பாடுவது உங்களுக்குப் பிடிக்கும் அல்லவா'
- நமது வாட்ஸ் ஆப் குழுவில் ஒரு பாடலின் நான்கு வரிகள் தரப்பட்டுள்ளன.
- அவற்றை அவற்றை விருப்பமான முறையில் மெட்டமைத்துப் பாட வாய்ப்பளித்தல்

பெரியாற்றில் பெரி மீன்
குஞ்சு ஒரங்கு போல்
என் குஞ்சு ஒரங்கு ஒரங்கு
சிற்றாற்றில் சிறு மீன்
குஞ்சு ஒரங்கு போல்

என் குஞ்சு ஓரங்கு ஓரங்கு

ஓரிருவருக்கு வாய்ப்பு
சிறப்பாக மெட்டமைத்தவரைப் பாராட்டுதல்

- இந்தப் பாடலை மெட்டமைக்க முனைந்த போது நீங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் எவை?
- சில சொற்கள் புதிய சொற்கள் போல தோன்றின எனவே மெட்டமைக்க இயலாத சூழல்
- இது பாலக்காடு மாவட்டம் அட்டப்பாடியில் உள்ள ஓர் பழங்குடி இனத்தவர் பாடலாகும்
- இந்தப் பாடலுக்கு ஓர் இரசனைக் குறிப்பு தயாரிக கச் செய்தல்
- தனி நபர் படைப்பு
- எழுதிய குறிப்பை வாசித்து வெளியிட வாய்ப்பளித்தல்.
- ஒரு சிலருக்கு வாய்ப்பு
- சிறப்பாக இரசனைக் குறிப்பு எழுதியவர்களைப் பாராட்டுதல்.
- பெரியாற்றில் பெரிய மீன் குஞ்சு உறங்குவது போன்றும் சிறியாற்றில் சிறிய மீன் குஞ்சு உறங்குவது போலவும் என் குஞ்சு உறங்கு என்று தன் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிறாள் தாய்.
- பொதுவாக மீன் குஞ்சுகள் உறங்கு வதில்லை எந்த நேரத்திலும் ஆபத்துகள் வரலாம் என்ற கண்ணோட்டத் தோடு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்.
- யானை, புலி போன்ற வன விலங்குகள் வசிக்கும் காட்டில் நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நமக்கு ஆபத்துக்கள் வரலாம். எனவே பெரியாற்றில் உறங்கும் பெரிய மீனின் குஞ்சோடும் சிற்றாற்றிலும் உறங்கும் சிறிய மீனின் குஞ்சோடும் தனது குழந்தையை ஒப்பிடுகிறார் இந்தத் தாய்.
- கேரளப் பழங்குடிகளின் அறிவு எவ்வளவு விரிவானது பார்த்தீர்களா?
- நமது கேரள மாநிலத்தில் பழங்குடிகள் எந்தெந்த மாவட்டங்களில் வசிக்கிறார்கள்?
- அதிகமான பழங்குடியினர் வசிக்கும் மாவட்டம் எது?

- அவரவர் ஊகங்களை எழுத வாய்ப்பளித்தல்.
- தொடர்ந்து வரைபட வடிவிலான புள்ளி விபரங்களை வாட்ஸ் ஆப்பில வெளியிடல்
- யாருடைய ஊகம் சரியாக .இருந்தது.? ஏன்?
- பழங்குடியினர் தொடர்பாக கூடுதல் விபரங்களை நாம் தெரிந்து கொள்ள முயலுவதில்லை.
- கேரளத்தில் பதினான்கு மாவட்டங்களிலும் பழங்குடியினர் வசிப்பது உண்டு. 36 ற்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் மக்கள் பிரிவு என்பது மிக உயர்ந்த ஒரு எண்ணிக்கை ஆகும்.
- உங்களது பள்ளிக்கும் இத்தகைய மாணவர்கள் வரலாம்.
- இவர்கள் பேசும் மொழியை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியாதது போலவே நமது மொழியை இவர்களாலும் புரிந்து கொள்ள முடியாதல்லவா?
- இத்தகைய மாணவர்களுக்கு நமது வகுப்பறையில் உதவுவது எப்படி?
- கலந்துரையாடுதல்
  இது போன்று வேற மொழி பேசும் வேற்று மாநிலத்தவரும் கேரளத்தின் பல பள்ளிகளிலும் கல்வி பயில்வதற்காக வரும் சூழலும் உள்ளது அவர்களைக் கையாளுவது எப்படி?
- கலந்துரையாடுதல்.
- RP.. ஒருங்கிணைத்தல்
- பழங்குடியினர் அதிகம் உள்ள மாவட்டங்களில் பழங்குடி மாணவர்களின் கல்வியை உறுதிப் படுத்துவதற்காக மென்டர் ஆசிரியர்களை நியமித்து உள்ளது இவர்கள் வட்டார மொழியையும் பயிற்று மொழியையும் இணைக்கும் பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.
- பழங்குடி மாணவர்களின் நலன் கருதி சிக்ஷா கொரோனா காலக்கட்டத்தில் அவர்களுக்கென தனி இணைய வழி வகுப்புகளை நடைமுறைப் படுத்தியது.
- பழங்குடி மாணவர்களின் மொழி மற்றும் அறிவுத் திறனை வளர்ப்பதற்காக அவரது மொழியில் உள்ள பாடல் மற்றும் கதை போன்ற வற்றை பயிற்று மொழியின் வரிவடிவத்தில் வெளியிட்டு ஆர்வம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கியது.

- நமது வகுப்பில் மேற்கூறிய மாணவர்கள் (பழங்குடி மற்றும் வேற்று மாநிலத்தவர்) அவர்களது மொழியை அறிந்து பயிற்று மொழியோடு தொடர்பு படுத்தி இணைப்புச் செயல் பாடுகள் வழங்க வேண்டும் .
- CPTA, PTA, SRG, கல்வி ஆர்வலர்களின் உதவியோடு உதவிச் செயல்பாடுகளும் இணைப்புச் செயல்பாடுகளும் வடிவமைத்து வழங்க வேண்டும்.
- சாதாரண கழந்தைகள் கற்பது போன்று இத்தகைய குழந்தைகட்கும் கற்கும் உரிமை உண்டு.

பட்டறை : 14

நோக்கம் :

நோக்கம் :

4. சமூகத்தில் பின் தங்கிய, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி மற்றும் வகுப்பறை நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான தடை களை கடப்பதற்கான மாதிரிகளை உருவாக்குதல். இதற்காக ஆசிரியர்களின் மனோபாவத்தில் மாற்றம் உருவாக்குதல் பால் சமத்துவம் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி ஆண் பெண் ஏற்ற தாழ்வு இல்லாத சூழலை பள்ளியில் நடைமுறைப் படுத்துதல்

- செயல் வரிசை
- பாரதியின் விடுதலைக் கும்மியை வாட்ஸ் ஆப் .குழுவில் வழங்குதல்.
- அவரவருக்கு விருப்பமான நான்கு வரிகளை மெட்டமைத்துப் பாட வாய்ப்பளித்தல்
- பாடிய பின் அந்த நான்கு வரிகள் பிடித்ததற்கான காரணத்தை வெளியிட வாய்ப்பளித்தல்

ஆசிரியர் : *மகாகவி பாரதியார்.*

கும்மியடி!தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார்,அதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலை கொண்டு நாயை விற்பார்,அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார். (கும்மி)

கற்பு நிலையென்று சொல்ல வந்தார்,இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை கணென்று கும்மியடி! (கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்;தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடு வோம். (கும்மி)

காத லொருவனைக் கைப்பிடித்தே,அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி! (கும்மி).

- **பாடலில் அன்றைய காலக் கட்டத்தில் பெண்களுக்கு எதிராக நிலை நின்றிருந்த என்னென்ன அடக்கு முறைகள் கூறப்பட்டுள்ளன?'**
- **கலந்துரையாடுதல்**

- **ஏட்டைத் தொட முடியாத நிலை / கல்வி கற்க இயலாத நிலை.**
- **வீட்டை விட்டு சுதந்திரமாக வெளியேற இயலாத நிலை**
- **அடித்து வசக்குதல்**

- தீர்மானம் எடுக்கும் போது பெண்களிடம் களைக் கேளாமை
- திருமணத்தின் போது பெண்ணின் விருப்பத்தைக் கேளாமை. கட்டாயத் திருமணம்.
- கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்.
- பட்டங்கள் ஆள வாய்ப்பின்மை
- சட்டங்கள் செய்ய வாய்ப்பின்மை
- அறிவினில் பெண் ஆணுக்கு இளைத்தவள் இல்லை.
- வேதம் படைத்தல்
- நீதிகள் செய்தல்.
- விருப்பம் உள்ள வரனைத் தேர்ந்தெரத்தல்
- மாதர் அரங்கள் செய்தல்
- பாரதியின் காலத்தில் உள்ள இத்தகைய நிகழ்வுகள் இப்போதும் நிலை நிற்கிறதா?

- கலந்துரையாடல்
- ஒரு சிலருக்கு தங்களது கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.
- சமூத்தில் ஏராளமான மாற்றங்கள் வந்து விட்டது அன்று போல் இன்று நேர்முகமான அடக்கு முறைகள் கையாளப் படுவது இல்லை.
- எனினும் முழுமையான சுதந்திரம் பெண்களுக்கு வழங்கப் பட்டு விட்டன என்று கூற இயலுமா?

எங்கிருந்து தொடங்குவது?

- குடும்பத்தில் ஆண் பெண் சமத்துவம் எந்த அளவிற்கு வழங்கப்படுகிறது?
- ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் ஒரே போன்று நடத்தப் படுகின்றனரா?
- வீட்டு வேலைகளைச் பகிர்ந்து செய்வதில் ஆண் பெண் வேறுபாடு உண்டா?
- என்னென்ன வேலையை யாரெல்லாம் செய் கின்றனர்?
- குடும்பத்தில் ஒரு முக்கியத் தீர்மானம் எடுக்கும் தருணத்தில் தீர்மானம் எடுப்பது யார்?
- போன்ற கருத்துகளின் அடிப்படையில் கலந்துரையாடுதல்

- முன்பிருந்த நிலையைக் காட்டிலும் பெண்கள் நிலை உயர்ந்துள்ளது.
- பல வீடுகளிலும் முக்கியமான தீர்மானம் எடுப்பதில் பெண்களின் பங்கும் உள்ளது.'

- பள்ளிகளில் ஆண் பெண் வேறுபாடு காட்டப் படுகிறதா?
- கலந்துரையாடுதல்.
- பள்ளிகளில் ஆண் பெண் வேறுபாடு காட்டப்படுவது இல்லை
- ஒரே போன்று சீருடை அணிதல்
- வகுப்பறையைச் சுத்தம் செய்வதில் ஆண் குழந்தையையும் பங்கெடுக்கச் செய்தல்
- வகுப்புத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் போதும் ஆண் பெண் வேறுபாடு காட்டப்படுவது இல்லை
- ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கும் பள்ளிகளும் உண்டு.
- பள்ளித் தலைவர் மற்றும் பள்ளியில் செயல்படும் குழுக்களுக்கு தலைமைப் பொறுப்பும் ஆண் பெண் வேறுபாடு பார்த்து வழங்கப்படுவது இல்லை.
- ஆசிரியரை நியமித்தல் தலைமை ஆசிரியரை நியமித்தல் போன்ற அனைத்திலுமே பெண்களுக்கு ஆண்களுக்கு சமமான வாய்ப்புகள் வழங்கப் படுகிறது.
- .
- சமூகத்தில் ஆண் பெண் சமத்துவமின்மை எந்த அளவிற்கு நிலை நிற்கிறது?
- சமூகப் பொறுப்புகளில் ஆண் பெண் வேறுபாடு காட்டப் படுவது இல்லை.
- பஞ்சாயத்து போன்ற அமைப்புகளில் தலைமைப் பொறுப்பில் வருவதற்காக ஒரு குறிப்பிட்ட விகிதம் எண்ணிக்கை பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது
- சமூகத்தின் அனைத்து உயர்ந்த பொறுப்புகளிலும் இன்று பெண்கள் நின்று மிளிர்கிறார்கள்
- ஆண்களை விட சிறந்த நிர்வாகத் திறன் பெற்ற பெண்களும் நம்மிடையே உள்ளனர்.
- கலை, இலக்கியம், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முத்திரை பதிக்கின்றனர்.

RP ஒருங்கிணைப்பு

- பண்டைய காலத்தை வைத்துப் பார்க்கும் போது ஆணுக்குச் சமானமாக பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.
- ஆண் பெண் வேறுபாடு வெளிப் படையாகக் காட்டப் படுவது இல்லை .
- இருந்தும் இப்போதும் பெண்கள் என்றால் ஏளனமாகப் பார்க்கும் சூழல் சில தருணங்களில் நடை பெற்று வருகிறது.
- சமூகத்தில் பொருளாதாரமாகவும் சமூக அடிப்படையிலும் பின்தங்கிய குழலில் பெண் குழந்தைகளும் பெண்களும் மிகவும் அடக்குமுறைக்கு ஆட்படுகின்றனர்.
- பெண் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது.
- நினைத்த நேரத்திற்கு நினைத்த இடத்திற்கு சுதந்திரமாக செல்ல இயலாத சூழல் இப்போதும் உள்ளது.
- பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.
- வீட்டிலோ பள்ளியிலோ சமூகத்திலோ பெண்கள் மனது புண் படும்படியான எந்தவொரு செயலிலும் ஈடுபடாமல் இருப்பது நல்லது.
- நாம் அனைவரும் ஒன்றினைந்து பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்போம். .

.

.

.

பட்டறை : 15

1. நோக்கம் : குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் பள்ளி அளவிலான கல்வி மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ள உதவுதல்..

செயல் வரிசை

முதல் நாள் முதல் இன்று காலை வரை மாணவர்களின் . முழுமையான வளர்ச்சி தொடர்பாக பல மண்டலங்கள். தொடர்பாகக் ஏராளமான கலந்துரையாடினோம் அல்லவா

- குழந்தையை முழுமையாக அறிந்து கொண்டு குழந்தையில் ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளிகளை அடையாளம் கண்டு கொண்டு அவர்களுக்கு சரியான தீர்வுச் செயல்பாடுகளை அவர்களைக் கை பிடித்து உயர்த்தி கற்றல் வெற்றியை அனுபவிப்பவர்களாக மாற்றுவது நமது கடமை அல்லவா? அவ்வாறு சிறப்பான கற்றல் வெற்றியை எட்டுவதற்குக் குழந்தைகளை தயார் செய்ய சரியான திட்டமிடல் அவசியமாகும்.
- பள்ளி அளவில் குழந்தைகளின் இத்தகைய கற்றல் வளர்ச்சியை உறுதிப் படுத்துவதற்காக நாம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மாஸ்ட்டர் பிளான் தயார் செய்து நடைமுறைப் படுத்தத் தீர்மானித்தோம். கோவிட் 19 வந்ததன் காரணமாக அதை சிறப்பாக நடைமுறைப் படுத்த இயலவில்லை அல்லவா?
- அந்த மாஸ்டர் பிளானில் நாம் என்னவெல்லாம் உட்படுத்தி இருந்தோம்?

- தற்போது அதன் நிலை என்ன?
- கொரோனா மாறிய காலக் கட்டத்தில் நாம் கொரோனாவிற்கு முந்தைய காலக்கட்டத்தில் தயார் செய்த அகாடமிக் மாஸ்ட்டர் பிளானை அதே படி பயன்படுத்த முடியுமா ?
- குழந்தைகளின் கற்றல் இடைவெளிகளில் வந்த மாற்றத்திற்குத் தீர்வு காணும் விதத்தில் நமது பள்ளி அகாடமிக் மாஸ்டர் பிளானில் மாற்றம் செய்ய வேண்டுமல்லவா?
- எனில் பள்ளி அகாடமிக் மாஸ்ட்டர் பிளான் தயார் செய்வதற்கு முன்னோடியாக என்ன செய்ய வேண்டும்.
- வகுப்பு தல அகாடமிக் மாஸ்ட்டர் பிளான்கள் தயார் செய்ய வேண்டும்.
- வகுப்பு தல மாஸ்டர் பிளானில் எவற்றை எல்லாம் உட்படுத்த வேண்டும்.?
- குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு உதவக் கூடிய ஐந்து வளர்ச்சி மண்டங்களான படைப்பாற்றல் மண்டலம் மொழி வளர்ச்சி மண்டலம் உடல் தசை வளர்ச்சி 6ண்டலம் சமூக மற்றும் உணர்ச்சி மண்டலம் அறிவு வளர்ச்சி மண்டலம் ஆகிய வற்றில் ஏற்பட்ட கற்றல் இடைவெளிகள் மற்றும் அதற்கான தீர்வுச் செயல் பாடுகளையும் உட்படுத்த வேண்டும் அல்லவா?
- எனில் நாம் முதல் நாள் தயாரித்த இந்த ஐந்து மண்டலங்களில் ஏற்பட்டுள்ள இடைவெளிகள் அவற்றிற்கான தீர்வுகள் போன்றவை வகுப்பு தல அகாடமிக் மாஸ்ட்டர் பிளானில் உட்படுத்த வேண்டும்.
- மேலும் ஒவ்வொரு விஷயம் தொடர்பாக அந்தந்த வகுப்பில் குழந்தை எட்டிப் பிடித்த வேண்டிய இலக்குகள் தீர்மானித்து அவ்விலக்குகளை எட்டுவதற்கு ஆவசியமான செயல் வரிசையை மா ஸ்ட்டர் பிளானில் உட்படுத்த வேண்டும்.
- ஒன்று முதல் நான்கு வரை தொடக்க வகுப்புகளில் மாணவர்கள் எட்டிப் பிடிக்க வேண்டிய அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல் எழுதுதல், எண் அறிவு நால்வகைச் செயல் பாடுகள். கணிதம் தொடர்பான 16 ற்கும் அதிகமான செயல் திறன்கள், அற்றுச் சூழல் கல்வி தொடர்பான உற்று நோக்கல், அலசி ஆய்தல், முடிவிற்கு வருதல், மனப்பான்மை உருவாதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

- வகுப்பு தல அகாடமிக் மாஸ்ட்டர் பிளானிற்கு ஒரு முன்னுரை இருக்க வேண்டும் அம் முன்னுரையில் வரும் ஒரு வருட காலமாக அவ் வகுப்பில் உள்ள மாணவர்களிடம் என்ன மாற்றங்களை எதிர்பார்க்கிறோம் என்பதைச் சுருக்கமாக வெளியிட வேண்டும்.
- தொடர்ந்து இலக்குகளை வரிசைப் படுத்த வேண்டும்.
- இந்த இலக்குகளின் அடிப்படையில் வழங்க வேண்டிய செயல் பாடுகளை வரிசைப் படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு செயல் பாட்டினையும் எவ்வாறு நடைமுறைப் படுத்த உள்ளோம் என்ற செயல் வரிசை குறிப்பிடப். பட வேண்டும்.
- இவ்வாறு திட்டமிடும் போது எந்தெந்தச் செயல்பாடு எந்தெந்த மாதங்களில் நடைமுறைப் °படுத்தப் படுகிறது என்பவை தொடர்பான விளக்கங்கள் இருக்க வேண்டும்.

- இவ்வகையான குறிப்புகளின் அடிப்படையில் கலந்துரையாடிய பின் ஆசிரியர்களை நான்கு குழுக்களாக்குதல்

- குழுக்களில் இருந்து RP யின் பரிந்துரையின் படி குறிப்பிட்ட வகுப்பிற்கான அகாடமிக் மாஸ்ட்டர் பிளான் தயார் செய்யத் தொடங்குதல்.

- மாநில அளவில் தயார் செய்த மாதிரிகளை மேற்பார்வைக்காக வழங்குதல்.
- குறிப்பிட்ட நேரம் வழங்குதல்
- ஒவ்வொரு குழுவிலும் RP உதவுதல்
- சரி நாம் தயாராக்கிய இந்த வகுப்பு தல அகாடமிக் மாஸ்ட்டர் பிளானை வகுப்பு கூட்டத்தில் வெளியிட்டு தொடக்க விழா நடத்துவதாக இருந்தால் என்னென்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்?
- கலந்துரையாடுதல்.
- அனைத்துப் பெற்றோர்களையும் பங்கு பெறச் செய்ய வேண்டும்.
- தலைமை ஆசிரியர் SRG கன்வீனர் மற்று ஆசிரியர்கள் வார்டு மெம்பர் போன்றோரின் பங்களிப்பை உறுதிப் படுத்த வேண்டும்.

- வரவேற்புரை, தலைமை, தொடக்க உரை, வாழ்த்துரை, நன்றி போன்றவை வழங்குவதற்கான ஆட்களைத் தீர்மானிக்க வேண்டும்
- வகுப்பு தல அகாடமிக் மாஸ்டர் பிளானை வகுப்பு ஆசிரியர் வெளியிட வேண்டும்.
- இதற்கான ஒரு டிஜிடல் நோட்டீஸ் வடிவமைத்து வாட்ஸ் ஆப் குழுவில் வெளியிட வாய்ப்பு
- தொடர்ந்து ஒவ்வொரு குழுவும் அவரவர் வகுப்பிற்கான அகாடமிக் மாஸ்டர் பிளானை வெளியிடல்.
- உண்மையாகவே நடக்கும் ஒரு வகுப்பு தல அகாடமிக் மாஸ்டர் பிளான் வெளியிடுவதன் ஒரு ஒத்திகையாக இது அமைய வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடும் போது கடந்த மூன்று நாட்களாக நாம் கண்டடைந்த இடைவெளிகளுக்குத் தீர்வு காண ஏற்றதாக இந்த அகாடமிக் மாஸ்டர் பிளான் அமைந்துள்ளதா என மற்று குழுக்கள் மதிப்பிட்டு மாஸ்டர் பிளானை மேம்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்க வேண்டும்.
- RP யின் ஒருங்கிணைப்பு
- பள்ளி திறப்பதற்கு முன்பாக ஒவ்வொரு பள்ளியிலும் வகுப்பு தல மாஸ்ட்டர் பிளான்கள் உருவாக வேண்டும்.
- வகுப்பு தல மாஸ்ட்டர் பிளான்களை ஒருங்கிணைத்துப் பள்ளி அளவிலான மாஸ்ட்டர் பிளான்களை உருவாக்க வேண்டும்.
- பள்ளியின் PTA பஞ்சாயத்து பிரதிநிதிகள் கல்வி ஆர்வலர்கள் பெற்றோர் முன்னிலையில் பள்ளி அளவிலான அகாடமிக் மாஸ்டர் பிளானாக மாற வேண்டும்.
- வருடம் முழுமைக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த மாஸ்ட்டர் பிளான் தயார் செய்ய இயலவில்லை எனில் ஒவ்வொரு பருவத்திற்குமான அகாடமிக் மாஸ்ட்டர் பிளான் தயாரிக்கலாம்.
- அவ்வாறு தயாரித்த மாஸ்டர் பிளானில் இருந்து ஒவ்வொரு மாதம் வாரம் என்ற முறையில் செயல்பாடுகளை எடுத்து செயல் வரிசையைத் துல்லியப் படுத்தி வகுப்பறையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு வார SRG ல் மதிப்பிடலும் திட்டமிடலும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

பட்டறை : 16

- நோக்கம் : அறிவு உருவாக்கக் செயல்பாடுகளுக்கு உதவும் விதமாகவும் மகிழ்ச்சியான குழலில் கற்றல் நடைபெறுவதுமான சாட்சிகளை வெளியிடல்
- கலை மற்றும் செய்முறைக் கல்வியை மற்று மொழி விஷய பாடங்களின் அறிவு உருவாக் கத்தில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதில் ஆசிரியர்களைத் தெளிவு பெறச் செய்தல்.

செயல் வரிசை

பங்காளிகளின் TIP Activity.

- ஆசிரியர்களை 5 பேர் வீதமுள்ள குழுவாக்குதல்
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு சார்ட் பேப்பரின் கால் பாகம் வழங்குதல்.
- 10 வீதம் பேப்பர் கிளாஸ் களையும் வழங்குதல். (சிறிய வெள்ளை நிறத்தில் உள்ள வை)
- தொடர்ந்து RP யின் அறிவுரைக் கேற்ப சார்ட்டில் ஒட்டுதல்
- விருப்பமான முறையில் கிளாஸ்களை ஒட்டலாம்
- சார்ட்டின் மையப் பகுதியில் ஒட்டக்கூடாது.
- ஒன்றன் மீது ஒன்றாக ஒட்டக் கூடாது.
- கமிழ்த்து வைத்து ஒட்டக்கூடாது
- அழகுத்தன்மையோடு இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட நேரம் வழங்குதல்
- ஒவ்வொரு குழுவும் ஒட்டியதை வெளியிட வாய்ப்பளித்தல்.
- யாருடைய படைப்பு அழகாக உள்ளது காரணம் என்ன?
- கலந்துரையாடுதல்.

- ஒவ்வொரு வகுப்பிலும் தனிதத் தோடு தொடர்பு படுத்தி இதன் மூலம் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன?
- ஒன்று முதல் நான்கு வரை வகுப்பு வாரியாகவும்,
- எண்ணறிவு, கூட்டல், கழித்தல், பெருத்தல், வகுத்தல் போன்றவற்றின் வாய்ப்புகளையும் ஒவ்வொரு குழுவும் கண்டடைந்து வெளியிட வாய்ப் பளித்தல்.
- தொடர்ந்து RP ஒவ்வொருவருக்கும் வண்ண A4 பேப்பர் களை வழங்குதல்
- அதைப் பயன்படுத்தி பூக்கள் உருவாக்கச் செய்தல்
- தொடர்ந்து சார்ட் மற்றும் பேப்பர் கிளாஸ் பயன்படுத்தி ஒரு கிராமம் அமைக்கக் செய்தல்
- போதுமான நேரம் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் அவரவர் வடிவமைத்த கிராமத்தைப் பயன் படுத்தி மொழி, கணிதம், சுற்றுச் சூழல் கல்வி போன்றவை தொடர்பாக ஒவ்வொரு வகுப்பிலும் வழங்க வாய்ப்புள்ள செயல் பாடுகளை வெளியிட வாய்ப்பளித்தல்
- மற்று குழுக்கள் அவை தொடர்பாக மேம்படுத்த உதவும். கருத்துகளை வெளியிட வாய்ப்பளித்தல்.
- RP ஒருங்கிணைப்பு
- இது போன்று மாணவர்களின் உதவியோடு கலை மற்றும் செய்முறைக் கல்வியின் வாய்ப்புகளை மகிழ்ச்சியான சூழலில் அறிவு உருவாக்கச் செயலுக்காக பயன் படுத்தலாம்.
- பயிற்சியின் முடிவு
- RP பயிற்சியில் கடந்து வந்த கட்டங்களை தொகுத்து வழங்குதல்.
- பங்காளிகள் பயிற்சி அனுபவங்களைப் பங்கிட வாய்ப்பளித்தல்.
- தேசிய கீதம்
- பயிற்சி நிறைவு
- நன்றி, வணக்கம்.

Module Developer.

Krishnamoorthy M